**2014 වර්ෂය සඳහා**
**ජනලේඛන හා සංඛ්‍යාලේඛන දෙපාර්තමේන්තුවේ**
**කාර්ය සාධන වාර්තාව**

**ආචාර්ය ඒ.ජේ. සතරසිංහ**
**අධ්‍යක්ෂ ජනරාල්**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின்
**2014** ஆம் ஆண்டுக்கான
செயலாற்றுகை அறிக்கை

கலாநிதி ஏ.ஜே. சத்தரசிங்க
பணிப்பாளர் நாயகம்

# PERFORMANCE REPORT OF THE DEPARTMENT OF CENSUS AND STATISTICS FOR THE YEAR 2014

**Dr. A.J. Satharasinghe**
**DIRECTOR GENERAL**

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களமானது இலங்கையின் தேசிய புள்ளிவிபர நிறுவனமாக விளங்குவதுடன் அரசாங்கத்துக்குத் தேவையான புள்ளிவிபரத் தரவுகள் சேகரித்தல், பரம்பல் மற்றும் அரச நிறுவனங்களிற்கும் ஏனைய தரவுப் பாவனையாளர்களிற்கும் புள்ளிவிபரத் தரவுகளை வழங்குதல் என்பவற்றுக்கு பிரதானமாக பொறுப்புடையதாகவும் விளங்குகின்றது. நாட்டின் பல்வேறு துறைகளின் மக்களியல், சமூகப் பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தல், வழங்குதல் ஆகியன அடங்கலாக, புள்ளிவிபர சேவைகள் தேவைப்படும் சகல அரச முகவரகங்களிற்கும் தொழில் சார் அலுவலர்களைப் பயிற்றுவித்து, பணிக்கமர்த்தலும் அதன் பணியாகும். அத்துடன் புள்ளிவிபர விடயங்கள் தொடர்பில் உதவி தேவைப்படும் முகவரகங்களிற்கு அதன் தொழிநுட்ப பிரிவுகளினுடாக புள்ளிவிபர ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகிறது.

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டமை காரணமாக இவ்வாண்டு விசேடமாகப் பாரட்டப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்த செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் 2014 இன் குறித்த இலக்குகளை அடைய, திணைக்கள அலுவலர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய, அயரா உழைப்புடனான சேவையையும் மிகவும் பாராட்டுகிறேன். திணைக்களத்தின் இலக்கினை நிறைவேற்ற தங்கள் ஒத்துழைப்பை வழங்கிய அரச, தனியார் நிறவனங்கள், ஏனைய அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




டாக்டர்.ஏ.ஜே.சத்தரசிங்க

பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,

''சங்கியான மந்திரிய''

இல. 306/71, பொல்துவ வீதி, பத்தரமுல்ல

தொலைபேசி : +94 11 2147001

பக்ஸ் : +94 11 2147011

மின் அஞ்சல் : dgcensus@statistics.gov.lk

இணையத்தளம் : www.statistics.gov.lk

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| **1.** | **அறிமுகம்** | **30** |
| **2.** | **திணைக்களத்தின் செயற்பாடுகள்** | **30** |
| **2.1** | **திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்** | **31** |
| 2.1.1 | குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2012 | 31 |
| 2.1.2 | பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14 | 31 |
| 2.1.3 | மோதல் காரணமாக இறந்த/ காயமடைந்தோர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் சம்பந்தமான தொகைமதிப்பு - 2013 | 32 |
| 2.1.4 | அரச, அரச சார்புத்துறை வலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்பு | 33 |
| 2.1.5 | மக்களியல், சுகாதார அளவீடு - 2014/15 | 33 |
| 2.1.6 | குடித்தன வருமான, செலவின அளவீடு - 2012/13 | 33 |
| 2.1.7 | இலங்கை தொழிற்பல அளவீடு | 34 |
| 2.1.8 | நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்கான அளவீடு | 35 |
| 2.1.9 | தேயிலை, இறப்பர்,தெங்கு உற்பத்திச் செலவின அளவீடு | 35 |
| 2.1.10 | கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான காலாண்டு அளவீடு - 2014 | 35 |
| 2.1.11 | வருடாந்த நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான அளவீடு - 2014 | 36 |
| 2.1.12 | விலைகளைப் பரீட்சிக்கும் அளவீடு | 36 |
| **2.2** | **இலங்கையின் சமூகப் பொருளாதார நிலைமைகளை அளவிடுவதற்காக திணைக்களத்தால் நடாத்தப்படும் வேறு புள்ளிவிபர வேலைகள்** | **36** |
| 2.2.1 | நெற் புள்ளிவிபரம் | 36 |
| 2.2.2 | மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் கால்நடைகளின் புள்ளிவிபரங்கள் | 36 |
| 2.2.3 | விவசாய உற்பத்தி அளவுச் சுட்டெண் | 37 |
| 2.2.4 | தேசிய கணக்குகள் | 37 |
| 2.2.5 | கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் - (அடிப்படை 2006/07=100) | 38 |
| 2.2.6 | உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (PPI) | 39 |
| 2.2.7 | சில்லறை விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும். | 40 |
| 2.2.8 | தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI) | 40 |
| 2.2.9 | உள்ளூராட்சி புள்ளிவிபரங்கள் | 41 |
| 2.2.10 | ஆராய்ச்சியும் விசேட கற்கைகளும் | 41 |
| 2.2.11 | பயிற்சி நடவடிக்கைகள் | 42 |
| 2.2.12 | தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப நடவடிக்கைகள் | 43 |
| 2.2.13 | வெளியீட்டு நடவடிக்கைகள் | 44 |
| 2.2.14 | அச்சிடல் நடவடிக்கைகள் | 45 |
| 2.2.15 | வரைபட நடவடிக்கைகள் | 45 |

2.2.16 தரவுப் பரம்பல் நடவடிக்கைகள் 46

2.2.17 நூலக சேவை 47

2.2.18 வெளிக்கள முகாமை நடவடிக்கைகள் 48

**2.3 சில அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் அமைந்துள்ள , திணைக்களத்தின் கிளை அலுவலகங்களால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும் 48**

2.3.1 வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு 48

2.3.2 சராசரி உழைப்புகள், வேலை மணித்தியாலங்கள் சம்பந்தமான அளவீடு 49

2.3.3 ஆக்க் குறைந்த கூலி வீத சுட்டெண் கணித்தல் 49

2.3.4 கல்விப் புள்ளிவிபரங்கள் 49

2.3.5 வைத்திய புள்ளிவிபரங்கள் 50

2.3.6 வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள் 50

2.3.7 கடற்றொழில் புள்ளிவிபரங்கள் 51

2.3.8 சுங்கப் புள்ளிவிபரங்கள் 51

**3. நிர்வாகம் 52**

**3.1 பிரதான பிரிவுகள் , கிளை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்** 52

3.1.1 பிரிவுகளும் அலகுகளும் 52

3.1.2 அமைச்சுக்கள் , திணைக்களங்களில் உள்ள கிளை அலுவலகங்கள் 52

3.1.3 மாவட்ட அலுவலகங்கள் 52

3.1.4 மாகாண சபைகளில் உள்ள புள்ளிவிபர ஆளணியினர் 53

**3.2 ஆளணியினர் 53**

**3.3 மாநாடுகள் , கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றில் பங்குபற்றியோர் - 2014 55**

**3.4 பதவி உயர்வுகள் , புதிய நியமனங்கள் , விடுவுப்புகள் , பதவி விலகல்கள் , பதவி வெறிதாக்கல்கள் மற்றும் இளைப்பாறல்கள் 61**

**3.5 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் 62**

**4. நிதி அறிக்கை - 2014 63**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2014

## 1. அறிமுகம்

இந்த நாட்டின் சமூக, பொருளாதார நிலமைகள் சம்பந்தமான தரவுகளைச் சேகரித்தல், சீர்முறைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், வெளியிடல், புள்ளிவிபரக் குறிகாட்டிகளைக் கணித்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய அரசாங்க முகவர் நிலையமான தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தைச் சார்ந்தது. அரசாங்கத்தின் தேசிய திட்டமிடல், கொள்கை வகுத்தல் போன்றவற்றிற்கும் இவற்றின் முன்னேற்றங்களை மதிப்பிடல் போன்றவற்றிற்கும் தேவையான தகவல்களைத் தொடர்ந்து இத்திணைக்களம் வழங்குகின்றது. மேலும் இத்திணைக்களம் தான் நடாத்தும் தொகைமதிப்புகள், மாதிரி அளவீடுகளை உள்ளடக்கி வேறுபட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட பலதரப்பட்ட தகவல்களை உள்ளூர், வெளியூர் முகவர் நிலையங்களின் தேவைகளுக்கு தொடர்ந்து வழங்கி வருகின்றது. சேகரிக்கப்பட்ட இத்தரவுகள் சனத்தொகை, விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், விலைகள், தேசிய வருமானம் போன்ற விடயங்களை உள்ளடக்குகின்றன.

### தொலைநோக்கு

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை எய்தும் பொருட்டு, புள்ளிவிபரத் தரவுகளை துரிதமாக வழங்குவதில் பிராந்தியத்தின் முன்னோடியாக திகழ்தல்.

### செயல்நோக்கு

உலகச் சூழலில் வளமிக்க நாடொன்றை உருவாக்கும் பொருட்டு, தந்திரோபாய தலைமையின் கீழ் அர்ப்பணம் மிகு அலுவலர்களின் சேவைப் பயன்பாடு, மற்றும் புதிய தொழில்நுட்பம் என்பவற்றின் மூலம் வினைத்திறன் மிக்க முறையில் புள்ளிவிபரங்களை சரியாகவும், துரிதமாகவும் வழங்கி, நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்குதலே இதன் செயல் நோக்காகும்.

## 2. திணைக்களத்தின் செயற்பாடுகள்

இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் பின்வரும் மூன்று பரந்த பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன.

2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்.

2.2 நாட்டின் சமூகப் பொருளாதார நிலமைகள் சம்பந்தமான தரவு சேகரித்தல், கணித்தல் தொடர்பாக திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய புள்ளிவிபர வேலைகள்.

2.3 சில அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் அமைந்துள்ள, திணைக்களத்தின் கிளை அலுவலகங்களால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்.

## 2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்

### 2.1.1 குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2012

குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் நாடளாவிய ரீதியான சகல அட்டவணைகள் தயாரித்தலும் பூர்த்தியடைந்துள்ளதுடன் சகல அட்டவணைகளும் திணைக்கள இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகைமதிப்புக்குரிய இரு மாகாண மட்ட அறிக்கைகள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண அறிக்கைகளும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் மாவட்ட மட்ட அறிக்கைகளை இணையத்தில் வெளியிடும் பொருட்டு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஸ்கேனிங் செய்யப்பட்ட தொகைமதிப்பு படிவங்களில் 5% மாதிரிக்கேற்ப தொழில் தகைமை,வேலைவாய்ப்பு மற்றும் கைத்தொழிலுக்கான குறியீடு இடல் முடிவடைந்துள்ளதுடன் அம்மாதிரி அறிக்கையின் பதிப்பித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு,அச்சிடப்பட்டு தரவும் பாவணையாளர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

### 2.1.2 பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14

இலங்கையின் பொருளாதாரத் துறையிலுள்ள அமைப்பு ரீதியான வேறுபாடுளை இனங்காணும் பொருட்டு விவசாயம், வர்த்தக, சேவைகட் துறைகளை உள்ளடக்கும் வகையில் 2013/14 வருடங்களில் பொருளாதாரத் தொகைமதிப்பொன்று தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்பட்டது.

**விவசாயப் பிரிவு**

விவசாயப் பிரிவின் தரவு சேகரித்தல் இரு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. விவசாயத் தொகைமதிப்புக்கு ஏற்ப 20 ஏக்கருக்கு மேற்பட்ட தோட்டங்களை நிரற்படுத்தும் நடவடிக்கைகள் 2013 இல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இத்தொகைமதிப்பில் விவசாயத்திற்குரிய சகல கூறுகளினதும் விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் அத்தகவல்களிடையே பெரிய கமக்காணி, சிறிய கமக்காணி மற்றும் தோட்டங்ளை உள்ளடக்கியவாறு கமச்செய்கையாளர், கமச்செய்கையாளர் குடித்தனம், காணிப் பயன்பாடு மற்றும் உரிமை, ஒவ்வொரு பயிர்களின் கீழும் பயிரிடப்படும் நிலப்பரப்பு, ஆழ்கடல் /நன்னீர் /ஆற்று நீர் மீன் பிடிப்பு போன்ற விடயங்களுக்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

மேலும் இக்கட்டத்தின் போது, கி.உ.பிரிவு மட்டத்தில் ஒவ்வொரு கி.உ.பிரிவு மட்டத்திலும் விவசாயத் துறைக்குரிய வசதிகள், சந்தை வாய்ப்பு, விவசாய விரிவாக்கற் சேவைகள் போன்றன சம்பந்தமான தகவல்கள் விசேட வினாக்கொத்து ஒன்றின் மூலம் சேகரிக்கப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட 28,000 வீட்டுக் கூறுகளை மாதிரியாகக் கொண்டு உணவுப் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இக்கட்டத்தின் போது சேகரிக்கப்படும் தகவல்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அறிக்கைகள் வெளியிடப்படவுள்ளன. களத்தில் தரவு சேகரித்தலின் போது தயாரிக்கப்பட்ட சாராம்ச அறிக்கைகளைக் கொண்டு ஆரம்ப அறிக்கை தயாரித்தல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் சேகரித்த தகவல்ளைப் பயன்படுத்தி விரிவான அறிக்கயொன்று தரவு வகைப்படுத்தலின் பின்னர் வெளியிடப்படவுள்ளதுடன், தேசிய, மாவட்ட, பி.செ.பிரிவு மட்டப் புள்ளிவிபரங்களும் இதன் ஊடாக வெளியிடப்படும், அதன் பிரகாரம் கமக்காணிகளின் எண்ணிக்கை, கமச் செய்கையாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பளவு, விவசாய இயந்திர உபகரணங்கள் பாவணை, விவசாய உற்பத்திளை சேகரிக்கும் வசதி, உணவுக் கையிருப்புக்களைப் பேனுதல் ஆகிய புள்ளிவிபரங்கள் வெளியிடப்படும். இவ்வறிக்கைகளைத் தயாரிப்பதற்காக களத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஸ்கானிங் செய்தல், 2015 யூன் மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**கைத்தொழிற் பிரிவு**

பொருளாதாரத் தொகைமதிப்பின் கைத்தொழில் வர்த்தக, சேவைகட் பிரிவுகளுக்குரிய தரவுகளைச் சேகரித்தல், பொருளாதாரக் கூறுகளை நிரற்படுத்தல் மற்றும் அக்கூறுகளின் தெரிவு செய்யப்பட்ட மாதிரி ஒன்றினூடாக விரிவான தகவல் சேகரித்தல் ஆகியன,இரண்டு கட்டங்களில் 2014 இல் மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதாரக் கூறுகளை நிரற்படுத்தலின் கீழ்,

I. நிரற்படுத்தப்படும் பொருளாதாரக் கூறுகளுக்கு குறியீடிடல்.
II. பொருளாதாரக் கூறுகளின் குறியீடுளைப் பரீட்சித்தல்
III. பொருளாதாரக் கூறுகளுக்குரிய தரவுகளை கணனிப்படுத்தல்.
IV. நிறுவனங்களின் பட்டியலின் செம்மயைப் பரீட்சித்தல்.
V. நிரற்படுத்தும் கட்டத்துக்குரிய அறிக்கைக்கான அட்டவணை மாதிரிகள் தயாரித்தல்.

ஆகிய விடயங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் விரிவான தரவு சேகரித்தற் கட்டத்தில் ;

I. வினாக்கொத்து மற்றும் அதற்கான அறிவுறுத்தற் கைநூல் தயாரித்தல்.
II. தரவுப் பாவணையாளர்களை அழைத்து அவர்களின் தரவுத் தேவையைக் கண்டறிதல்.
III. வினாக்கொத்துக்களின் பொருத்தப்பாட்டைக் கண்டறிவதற்காக தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் முற்பரிசோதனையை மேற்கொள்ளல்.
IV. வினாக்கொத்துக்களின் பொருத்தப்பாட்டைக் கண்டறிவதற்காகவும் வெளிக்கள அலுவலர்களின் கருத்துக்கள், அபிப்பிராயங்களைப் பெறுவதற்காகவும் முன்னோடி அளவீடு ஒன்றை மேற்கொள்ளல்.
V. பொருளாதாரக் கூறுகளின் விரிவான தகவல் சேகரிக்கும் பொருட்டு மாதிரி ஒனறைத் தெரிவு செய்தல்.
VI. வினாக்கொத்துக்கள், அறிவுறுத்தற் கைநூல்கள் தயாரித்தல் மற்றும் தேவையான அளவு அச்சிடல்.
VII. கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் விளம்பர நடவடிக்கைகள்.
VIII. பயிற்சி வகுப்புகள் நடத்தி தரவு சேகரிக்கும் அலுவலர்களை அறிவூட்டுதல்.

போன்ற விடயங்ளைப் பூர்த்தி செய்துள்ளதுடன் தற்போது நாடளாவிய ரீதியில் தரவு சேகரித்தல் வேலைகள் நிறைவடைந்துகொண்டு வருகிறது.

## 2.1.3 மோதல் காரணமாக இறந்த/ காயமடைந்தோர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் சம்பந்தமான தொகைமதிப்பு - 2013

நாட்டினுள் சாந்தியை ஏற்படுத்தி சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் முள்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் படி இலங்கையில் நிலவிய உள்நாட்டு மோதல் காரணமாக ஏற்பட்ட சேதம் சம்பந்தமான தொகைமதிப்பு ஒன்றை நடத்தி தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டமையால் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களமும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இணைந்து மேற்படி தொகைமதிப்பு மேற்கொள்ளப்பட்டது. இத்தொகைமதிப்பின் சகல தொழில்நுட்ப நடவடிக்கைகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது, இந்த சகல வேலைகளும் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்த பிரிவு ஒன்றினால் தொடர்ச்சியாக மேற்பார்வையிடப்பட்டது.

இத்தொகைமதிப்பின் கள நடவடிக்கைகள் (தரவு சேகரித்தல்) 2013 இல் மேற்கொள்ளப்பட்டதுடன் தொகைமதிப்பின் கள நடவடிக்கைகள் முடிவடைந்ததும் தகவல் சேகரிக்கப்பட்ட படிவங்கள், சாராம்ச அறிக்கைகளை தலைமை அலுவலகத்துக்குக் கொண்டு வருதல் 2014 ஜனவரி முதல் இரு வாரங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. தொகைமதிப்பின் தரவு வகைப்படுத்தல் நடவடிக்கைகள் 3 கட்டங்களில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. களத்தில் பூர்த்தி செய்யப்பட்ட சகல படிவங்களும் தலைமை அலுவலகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா எனச் சரிப்பார்த்தல் முதலாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் அது 2014 ஜனவரியில் பூர்த்தி செய்யப்பட்டது. சாராம்ச அறிக்கை பதிப்பித்தல், சாராம்ச அறிக்கையிலுள்ள தரவுகளைக்கொண்டு ஆரம்ப அறிக்கை தயாரித்தல் என்பன இரண்டாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் அது 2014 இரண்டாம் காலாண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டது. தொகைமதிப்பின் இறுதி அறிக்கைக்கான தரவுகள் தயாரித்தல் மூன்றாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் தொகைமதிப்புத் தரவுப்படிவங்களை பதிப்பித்தல், குறியீடிடல், கணனிப்படுத்தல், அட்டவணைப்படுத்தல், தரவுகளை நுண்ணாய்வு செய்தல், இறுதி அறிக்கை தயாரித்தல் போன்ற வேலைகள் மேற்கொள்ளவேண்டியிருந்தது, படிவங்களைப் பதிப்பித்தல், கணனிப்படுத்தல்/ ஸ்கானிங் செய்தல் என்பன இவ்வருடத்தினுள் பூர்த்தி செய்யப்படும்.

### 2.1.4 அரச, அரச சார்புத்துறை வேலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்பு

அரச துறையின் 08 நிறுவனங்களின் மாதிரி ஒன்று தெரிவு செய்யப்பட்டு மேற்படி தொகைமதிப்புக்கான முன்னோடி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அம்முன்னோடி ஆய்வுத் தகவல்களை சேகரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் வினாக்கொத்து சம்பந்தமான மென்பொருள், உரிய மாதிரிக்கமைய உள்ளடக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

### 2.1.5 மக்களியல், சுகாதார அளவீடு - 2014/15

இவ்வளவீட்டுக்குரிய தரவுகளைப் பயன்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து நடைபெற்ற கூட்டங்களின் தீர்மானத்தின் படி அடிப்படை வினாக்கொத்து தயாரித்தல் முடிவுற்றுள்ளதுடன் அதற்குரிய பயிற்சி வகுப்பு நடத்துதல் மற்றும் வினாக்கொத்தை முன் பரீட்சித்தல் என்பவற்றை மேற்கொள்ளத் திட்டமிடப்படுகிறது.

இவ்வளவீட்டுக்கான மதிப்பிடப்பட்ட செலவு, சுகாதார அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இது சம்பந்தமாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வளவீட்டுக்கான கணனி உதவியுடனான தனிப்பட்ட நேர்காணல் Computer Assisted Personal Interviewing (CAPI) தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சிலிருந்து பெற்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களை உரிய நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கும் திட்டமிடப்படுகிறது.

### 2.1.6 குடித்தன வருமான, செலவின அளவீடு - 2012/13

தேசிய குடித்தன அளவீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடித்தன வருமான, செலவின அளவீடு இத்திணைக்களத்தால் 3 மூன்று வருடங்களுக்கொரு முறை நடத்தப்படுகிறது. இவ் அளவீட்டுத் தொடரின் எட்டாவது அளவீட்டின் கள நடவடிக்கைகள் 2012 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2013 யூனை மாதம் நிறைவு செய்யப்பட்டது.

இது நாடளாவிய ரீதியில் 12 மாதச்சுற்றுக்களில் மேற்கொள்ளப்படுகிறது. தகவல்கள் பெறும் படிவம் 9 பிரிவுகளைக் கொண்டதுடன் மக்களியல், பாடசாலைக் கல்வி, சுகாதாரம்,குடித்தன வருமான, செலவீனம், வீட்டுக்கூறிலுள்ள நீடித்துழைக்கும் பொருட்கள், அடிப்படை வசதி, குடித்தனத்தின் கடன் தன்மை, வீட்டு ஆரோக்கியம் இயற்கை அனர்த்தம், காணி உரிமை, கால்நடை என்பன சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இம்முறை அளவீட்டுக்குப் பெற்ற தகவல்களின் சமூகப் பாதுகாப்புச் சுட்டெண் கணித்தலுக்குத் தேவையான தரவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்அளவீட்டிற்குரிய 12 மாதங்களை உள்ளடக்கிய சுருக்க அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: குடித்தன வருமான, செலவின அளவீடு - 2012/13 - தேசிய மட்டத்திலான சுட்டி**

| குறிகாட்டி | அலகு | பெறுமதி |
|---|---|---|
| குடித்தனங்களின் மாதாந்த இடைய வருமானம் | ரூபா | 45,878 |
| குடித்தனங்களின் மாதாந்த இடைய வருமானம் | ரூபா | 30,814 |
| குடித்தனங்களின் மாதாந்த தனிநபர் இடைய வருமானம் | ரூபா | 11,819 |
| வருமானம் ஈடுபட்டவர்களின் மாதாந்த குடித்தன இடைய வருமானம் | ரூபா | 25,963 |
| குடித்தன வருமான கினிக் குணகம் | - | 0.48 |
| மாதாந்த குடித்தன சராசரிச் செலவு | ரூபா | 41,444 |
| உணவுக் குணகம் | % | 37.8 |
| வறுமைச் சுட்டெண் | % | 6.7 |

## 2.1.7 இலங்கை தொழிற்பல அளவீடு

இலங்கைத் தொழிற்பல அளவீடானது, இலங்கையின் தொழிற்பலம், வேலைவாய்ப்பு, வேலையற்றோர் என்பவற்றின் போக்கினையும் மட்டங்களையும் அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்டது, இது 1990 முதற் காலாண்டிலிருந்து காலாண்டு ரீதியாக நடாத்தப்பட்டு வருகிறது. இவ்வளவீடு தேசிய மட்ட மதிப்பீடுகளை காலாண்டு ரீதியிலும் மாவட்ட மட்ட மதிப்பீடுகளை வருடாந்த ரீதியிலும் வழங்குகிறது.

2014 இன் முதலாம், இரண்டாம் காலாண்டு அளவீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு முடிவடைந்குள்ளதுடன் 2014 இன் முதலாம் காலாண்டு அறிக்க இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கைத் தொழிற்பல அளவீடு - 2015 இற்கான படிவம் அச்சிடல் அடங்கலாக ஏனைய களத்துக்குரிய நடவடிக்கைகள் உரியவாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2 : இலங்கை தொழிற்பல அளவீடு 2013 - தொகுப்புச் சுட்டி**

| குறிகாட்டி | இலங்கை | ஆண் | பெண் |
|---|---|---|---|
| தொழிற்பலம் (15 வயதும் அதற்கு மேலும்) ('000) | 16,360 | 7,577 | 8,782 |
| தொழிற்பலப் பங்களிப்பு வீதம் (%) | 53.8 | 74.9 | 35.6 |
| தொழில் புரிவோர் ('000) | 8,418 | 5,499 | 2,919 |
| வேலைவாய்ப்பு வீதம் (%) | 95.6 | 96.8 | 93.4 |
| வேலையற்றோர் ('000) | 384 | 179 | 205 |
| வேலையற்றோர் வீதம் (%) | 4.4 | 3.2 | 6.6 |

### 2.1.8 நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்கான அளவீடு

நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்கான அளவீடு, ஆண்டுக்கு இரு முறை மேற்கொள்ளப்பட்டதுடன் 2013/14 பெரும்போகம், 2014 சிறுபோகம் என்பன இவ்வருடத்துக்குரியனவாகும். 2013/14 பெரும்போகம் மற்றும் 2014 சிறுபோகத்துக்கான ஒவ்வொரு மாவட்டங்களுக்கான நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் பிரதேச முறைக்கேற்ப ஏக்கர் ஒன்றுக்கு அல்லது ஹெக்டேயர் ஒன்றுக்கு நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக இவ்வளவீடு நடத்தப்படுகிறது.

மேற்படி அளவீட்டுக்கு சமாந்தரமாக நெற்நெய்கை சம்பந்தமான உபரித் தகவல்களான ஒவ்வொரு ஒவ்வொரு நெல் வகைக்கேற்ப நெல் பயிரிடப்படும் நிலப்பரப்பளவு, நிலம் பயன்படுத்தும் முறை, உரப்பாவனை போன்ற விடயங்கள் சம்பந்தமான தரவுகளும் சேகரிக்கப்பட்டது.

### 2.1.9 தேயிலை, இறப்பர்,தெங்கு உற்பத்திச் செலவின அளவீடு

2012/13 இற்கான தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய பிரதான பயிர்களின் உற்பத்திச் செலவுகளைக் கணிப்பிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டது. ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திச் செலவினம் கணிப்பிடுவதற்கான விரிவான தகவல்கள் இலங்கைத் தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சலைகளிலிருந்து பெறப்பட்டது. இறப்பர் உற்பத்திச் செலவினம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது. இவ் அளவீடுகளிலிருந்து பெற்ற தகவல்களின் ஊடாக 2013/14 வருடத்துக்கான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திச் செலவினம் கணிப்பிடப்பட்டது.

### 2.1.10 கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான காலாண்டு அளவீடு - 2014

உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி மட்டம், மூலப்பொருள் நுகர்வு, வருவாய், தொழில் அமர்வு உற்பத்தி போன்றவற்றின் அண்மித்த விபரங்களைப் பெறும் பொருட்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

2014 வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்கான கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வளர்ச்சி வீதம் கணிக்கத் தேவையான நடவடிக்கைகளும் தேசிய கணக்குகள் பிரிவால் முன்னெடுக்கப்பட்டது.அத்துடன் 2013 க்குரிய மேற்படி அளவீட்டின் நான்காம் காலாண்டின் கள

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பெற்ற தகவல்களின் அடிப்படையில் வளர்ச்சி வீதமும் 2013 முழு வருடத்துக்கான வளர்ச்சி விதமும் கணிப்பிடப்பட்டு உரிய தரவுகள் தேசிய கணக்குகள் பிரிவுக்கு வழங்கப்பட்டது.

### 2.1.11 வருடாந்த நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான அளவீடு - 2014

பொருளாதாரத் தொகைமதிப்பு 2013 / 2014 இன் கீழ் கைத்தொழில் பிரிவுக்கான தரவு சேகரித்தல் மேற்கொள்ளப்பட்டமையால் மேற்படி அளவீடு நடத்தத் தேவையற்று இருந்ததுடன் 2013 இற்குரிய மேற்படி அளவீட்டின் தரவுகளைப் பதிப்பித்தல் மற்றும் குறியீட்டிடல் நடைபெற்றது.

### 2.1.12 விலைகளைப் பரீட்சிக்கும் அளவீடு

ஒவ்வொரு மாதமும் கொழும்பு நுக்வோர் விலைச்சுட்டெண் கணித்து வெளியிடத் தேவையான விலைத் தகவல்களைப் பெறும் பொருட்டு விலைகளும் கூலிகளும் பிரிவு அலுவலர்களால் கொழும்பு மாவட்ட நகரப் பிரதேசங்களை உள்ளடக்கி விலைகளைப் பரீட்சிக்கும் அளவீடு மேற்கொள்ளப்படுகிறது.

இங்கு தெரிவு செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளின் விலைத் தகவல்கள் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும். குடித்தனக்கார்ர்களின் தற்போதைய செலவுப் போக்கினை வெளிப்படுத்த இத்தகவல்கள் பயன்படுத்தப்படுவதுடன் விலைகளைப் பரீட்சிக்கும் அளவீட்டுத் தகவல்களின் ஊடாக கொழும்பு நுகர்வோர் விலைச்சட்டெண் கணித்தல் மற்றும் வெளியிடல் என்பன மேற்கொள்ளப்படுகிறது.

## 2.2 இலங்கையின் சமூக பொருளாதார நிலமைகள் சம்பந்தமாக தரவு சேகரித்தல், கணித்தல் சம்பந்தமாக திணைக்களத்தால் நடாத்தப்படும் வேறு புள்ளிவிபர வேலைகள்.

### 2.2.1 நெற் புள்ளிவிபரம்

நாட்டின் சகல நெற் காணிகளின் கணக்கெடுப்பும் நீர்ப்பாசன முறைப்படியும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகவும் பிரதேசச் செயலாளர் பிரிவு ரீதியாகவும் நடாத்தப்பட்டது. 2013/2014 பெரும்போகம், 2014 சிறுபோகம் என்பன தொடர்பில் பண்படுத்தப்பட்ட, விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட பரப்பு சம்பந்தமான பெறுமானங்கள் கணிக்கப்பட்டன.
தற்போது இரு போகங்களுக்கான தரவுகள் ஆய்வு செய்யப்பட்டு மாவட்ட மட்டத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் மகாவலிப் பிரதேசங்களில் சிறு முகாமைத்துவப் பிரிவு ரீதியாகவும் புள்ளிவிபரங்கள் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

### 2.2.2 மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் கால்நடைகளின் புள்ளிவிபரங்கள்

போக ரீதியாக அறிவிப்போரின் உதவியுடன் சேகரிக்கப்படும் மேட்டு நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களின் நிலப்பரப்பளவு, உற்பத்திக்குரிய புள்ளிவிபரங்கள் மற்றும் வருடாந்தம் சேகரிக்கப்படும் கால்நடைப் புள்ளிவிபரங்கள் என்பவற்றைத் தொகுத்து அரச கொள்கை வகுத்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குத் தரவு வழங்கல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படும்.

இங்கு நிரந்தரப்பயிர்கள், தற்காலிகப் பயிர்கள் என்பவற்றின் கீழ் சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பழங்கள், மரக்கறி வகை, தானியங்கள் போன்றன அடங்கலாக 60 வகைகளை உள்ளடக்கியவாறு பயிரிடப்பட்ட நிலப்பரப்பளவு, அறுவடை செய்யப்பட்ட பெரும்போகம் மற்றும் சிறுபோகத்துக்காக மதிப்பிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

### 2.2.3 விவசாய உற்பத்தி அளவுச் சுட்டெண்

விவசாய உற்பத்தி அளவு வேறுபாட்டை கடந்த வருடங்களுடன் ஒப்பிட்டு ஆராயும் நோக்கில், விவசாய உற்பத்தி சம்பந்தமான வருடாந்த அளவுச் சுட்டெண் தயாரிக்கப்படுவதுடன் நெல், பிரதான ஏற்றுமதிப் பயிர்கள் , தானிய வகை, ஏனைய பருவகாலப் பயிர்கள், மரக்கறி, பழவகை, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் கால்நடை உற்பத்திகள் ஆகிய பிரிவுகளுக்கு தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுகிறது. அதற்காக தற்போது அடிப்படை வருடம் 2002 ஆக்க் கொள்ளப்படுகிறது. 2013 இன் விவசாய உற்பத்தியைக் கருத்திற்கொண்டு இவ்வருடத்துக்கான அளவுச்சுட்டெண் கணிப்பிடப்பட்டது.

### 2.2.4 தேசிய கணக்குகள்

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை தேசிய கணக்குகள் கணிப்பதற்கு பொறுப்பாக உள்ளது. இதற்கமைய வருடார்ந்த தேசிய கணக்குகள் மதிப்பிடலில் உற்பத்திச் செலவினம் மற்றும் வருமான அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகிறது.

வருடம் அல்லது காலாண்டு முடிவடைந்தவுடன் தேசிய கணக்குகள் தயாரித்தலுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்படும். தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் கணித்தலுக்கு தேவையான தரவுகள் இலங்கை மத்தியவங்கி, இலங்கை சுங்கம், பொதுத் திறைசேரி, ஏனைய அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் திணைக்களத்தின் சொந்த தரவு வளங்கள் என்பவற்றிலிருந்து சேகரிக்கப்படுகின்றன.

தேசிய கணக்குகள் மதிப்பீட்டின் வருடார்ந்த விரைவு மதிப்பீடுகள் மற்றும் காலாண்டு வருடாந்த கணக்கு மதிப்பீடுகள் என்பன குறித்த காலாண்டு வருடம் பூர்த்தியடைந்து 75 நாட்களில் பிரசுரிக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் 2013 இன்வருடாந்த தேசிய கணக்கு, 2013 இன் நான்காம் காலாண்டு மதிப்பீடு, 2014 இன் முதலாம் இரண்டாம், மூன்றாம் காலாண்டு மதிப்பீடுகள் என்பன தயாரிக்கப்பட்டன. அவ்வாறு சேகரிக்கப்பட்ட தேசிய கணக்கு மதிப்பீட்டுக்குப் புள்ளிவிபர அட்டவணைகள் மற்றும் உரிய சிறு விபரங்களுடன் ஊடக அறிவித்தலிலும் உரியவாறு திணைக்கள இணையத்திலும் வெளியிடப்படுகிறது.

2014 இல் வெளியிடப்பட்ட தேசியக்கணக்கு மதிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கி, நிதி , திட்டமிடல் அமைச்சு, சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், உலக வங்கி மற்றும் ஏனைய உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், தனி நபர்கள் ஆகியோருக்கு வருடம் முழுவதும் வழங்கப்பட்டது.

தேசிய கணக்குகள் வருடாந்த வெளியீட்டின் 40வது வெளியீடாக " இலங்கை தேசிய கணக்குகள் - 2013", 2014ம் வருடத்தில் வெளியிடப்பட்டது.

**அட்டவணை 3 : வருடாந்த தேசிய கணக்கு மதிப்பீடுகளின் பிரதான சுட்டெண்**

| சுட்டெண் | 2012 | 2013 |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (%) | 6.3 | 7.2 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா) | 372,814 | 423,484 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர்) | 2,922 | 3,280 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம் (ரூபா) | 365,194 | 412,447 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம் (அ.டொலர்) | 2,862 | 3,195 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர்) வளர்ச்சி (%) | 3.0 | 12.3 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம்(அ.டொலர்) வளர்ச்சி (%) | 2.0 | 11.6 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கமாக விலைச்சுட்டெண்(2002=100) | 248.9 | 265.6 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உட்கிடை விலைச் சுட்டெண்ணின்படி பணவீக்கம் (%) | 8.9 | 6.7 |

### 2.2.5 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் - (அடிப்படை 2006/07=100)


இலங்கையின் பணவீக்கத்தை அளவிடும் அளவீடாக 2011 யூன் மாத்த்திலிலிருந்து இச்சுட்டெண் (அடிப்படை 2006/07=100) பயன்படுத்தப்படுகிறது. அதன்படி 2013, 2014 வருடங்களின் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாறிகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4 : கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மாறிகள், 2013/2014**

| வருடம் | மாதம் | சுட்டெண் | பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) |
|---|---|---|---|
| 2013 | ஜன. | 170.0 | 9.8 |
| | பெப். | 170.7 | 9.8 |
| | மார்ச் | 170.8 | 7.5 |
| | ஏப். | 170.0 | 6.4 |
| | மே | 173.9 | 7.3 |
| | யூன் | 176.5 | 6.8 |
| | யூலை | 176.8 | 6.1 |
| | ஓக. | 176.2 | 6.3 |
| | செப். | 175.8 | 6.2 |
| | ஒக்ரோ. | 176.1 | 6.7 |
| | நவம்பர் | 176.5 | 5.6 |
| | டிசம்பர் | 176.5 | 4.7 |

| வருடம் | மாதம் | சுட்டெண் | பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) |
|---|---|---|---|
| 2014 | ஜன. | 177.5 | 4.4 |
| | பெப். | 177.8 | 4.2 |
| | மார்ச் | 177.9 | 4.2 |
| | ஏப். | 178.4 | 4.9 |
| | மே | 179.5 | 3.2 |
| | யூன் | 181.4 | 2.8 |
| | யூலை | 183.2 | 3.6 |
| | ஓக. | 182.3 | 3.5 |
| | செப். | 181.9 | 3.5 |
| | ஒக்ரோ. | 179.0 | 1.6 |
| | நவம்பர் | 179.2 | 1.5 |
| | டிசம்பர் | 180.2 | 2.1 |

**வரைபு 1 - கொழும்பு நுகர்வோர் விலைச்** சுட்டெண் (அடிப்படை **2006/07 = 100)**




### 2.2.6 உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (PPI)

நாட்டின் தேசிய புள்ளிவிபர நிகழ்ச்சித்திட்டத்துக்கு உள்ளடக்கப்படும் அடிப்படை விடயமாக உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் இனங்காணப்படுவதுடன் உள்நாட்டு உற்பத்தியாளர் தமது உற்பத்திகளுக்கு பெறும் விலை வேறுபாடுகள் இதன் மூலம் கணிக்கப்படுகிறது. இலங்கைத் தேசிய கணக்குகள் கணிப்பிடுதற்காகவும் இவ்விலைச் சிட்டெண் அவசியமானதாகும். அத்துடன் இலங்கை மத்திய வங்கி போன்ற நிறுவனங்கள், நாட்டின் சட்டவாக்கவியலாளர்கள், கொள்கை திட்டமிடுபவர்கள் ஆகியோர்க்கும் இச்சுட்டெண் அவசியமானதாகும். ஆரம்பத்தில், விவசாயம், உற்பத்திக் கைத்தொழில், பயன்பாட்டுக் கைத்தொழில் (மின், நீர் விநியோகம்) போன்ற துறைகளை உள்ளடக்கி இத்தகவல்கள் சேகரிக்கப்படுவதுடன் பூகோள ரீதியாக மேற்கு, மத்திய, தென் மாகாணங்கள் மாத்திரம் இதுவரை உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் விலைப் புள்ளிவிபரங்களை மேம்படுத்துவதற்காக சர்வதேச நாணய நிதிய ஆலோசகர் ஒருவர் விலைகள் பிரிவுக்கு வந்து அடிப்படைத் தகவல் சேகரிக்கும் படிவம் மற்றும் விலை சேகரிக்கும் படிவத்தை மேம்படுத்தியதுடன் அதற்கேற்ப பதிலளிப்பவர்களைத் தெளிவுபடுத்துதல், உற்பத்தியாளர்

விலைச்சுட்டெண் சம்பந்தமான அறிமுகத்துடனான சிறு குறிப்பைத் தயாரித்தல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது. இத்தகவல்கள் சேகரித்தல், தெரிவு செய்யப்பட்ட மாதிரிக்குரிய 378 நிறுவனங்களை உள்ளடக்கி கள நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டதுடன் நிறைகளை இடத்தெவையான முடிவுப்பொருட்கள்,கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் முறை சம்பந்தமான அடிப்படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட உற்பத்தி விலைகள், 2013 , 4ம் காலாண்டு மற்றும் 2014 முதலாம் காலாண்டு என்பவற்றுக்காக சேகரிக்கப்பட்டது. களத்திற்கு விஜயம் செய்யும் போது மூடியிருந்த நிறுவனங்கள், உள்வாங்கப்பட்ட பிரதேசத்துக்கு வெளியே இருந்த நிறுவனங்கள் மற்றும் தகவல் வழங்க மறுக்கப்பட்ட நிறுவனங்கள் பொருட்டு தற்போது மீள நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

### 2.2.7 சில்லறை விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும்.

இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் புதிய விடயமான நகரம் சார் சில்லறை விலைகளும் உற்பத்தி யாளர விலைகளும் சேகரிக்கையில் அதனை மேம்படுத்தும் பொருட்டு 2014 இன் இரண்டாம் காலாண்டிலிருந்து நகர சில்லறை விலை சேகரிக்கும் படிவம் திருத்தம் செய்யப்பட்டது. சகல மாவட்டங்களிலுமுள்ள பிரதான நகரங்களில் உணவு மற்றும் பல்வேறு நுகர்வோர் பொருட்கள் சம்பந்தமான சில்றை விலைகள் வாராந்த, மாதாந்த, காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்படுவதுடன் நாட்டில் உணவுப் பயிர்கள் பயிரிடுவோரின் விலைகளும் பி.செ.பிரிவு ரீதியாக ஒழுங்கான முறையில், மாதாந்தம் திணைக்களத்தின் களப் புள்ளிவிபர ஆளணியினரை ஈடுபடுத்தி விலைகள் சேகரிக்கப்பட்டு இத்தகவல்களை உள்ளடக்கி 2013 ஜனவரியிலிருந்து 2013 டிசம்பர் வரையான வாராந்த சில்லறை விலைகளின் (கொழும்பு மாவட்டம்) விலை வெளியீட்டின் 22வது பதிப்பு அச்சிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டது. 2010 - 2013 வரையான விபரங்களை, உள்ளடக்கி சில்லறை மற்றும் உற்பத்தியாளர் விலைகள் சம்பந்தமான 31வது வெளியீடு அச்சிடுதல் தற்போது முடியும் தறுவாயில் உள்ளது.

மேலும் இச்சில்றை மற்றும் உற்பத்தியாளர் விலைகள், தேசிய கணக்குகள் கணிப்பீட்டுக்காக தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவுக்கு காலாண்டு ரீதியாக வழங்கப்படுகிறது. அத்துடன் தரவுப் பாவனையாளர்களுக்கும் இத்தகவல்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப்பொருட்கள், திறந்த சந்தைச் சில்லறை விலைகள் போன்ற விபரங்கள் ஜனாதிபதி செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் உரிய அலுவலர்களுக்கும் வாராந்தம் அனுப்பி வைக்கபடுகிறது. இவ்விலை விபரங்கள் திணைக்கள இணையத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 2014இல் படையினர் மற்றும் ஏனைய தர அலுவலர்களினதும் ஏற்பாடுகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டு படைத் தளபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.2.8 தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI)

தற்போது கணிப்பிடப்படும் நுகர்வோர் விலைச் சுட்டெண் நகரப் பிரிவுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதுடன் அது கொழும்பு மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்படும் விலைத் தகவல்களையே கொண்டுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைத் தவிர தேசிய மட்டத்திலோ மாகாண மட்டத்திலோ வேறு பிரதேசங்களை உள்ளடக்கியவாறோ இதுவரை நுகர்வோர் விலைச்சுட்டெண் வெளியிடப்படவில்லை. தற்போதைய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நிறைப்படுத்தல், 2006/07 இலிருந்து மேற்கொள்ளப்படும் குடித்தன வருமான, செலவின அளவீட்டினூடாகப் பெறப்பட்ட குடித்தனச் செலவுத் தகவல்களின் அடிப்படையானதாகும். இந்நிறைப்படுத்தல் முறை, கொழும்பு மாவட்ட

நகரப்பிரிவுக்குரிய குடித்தனச் செலவை மாத்திரம் கொண்டிருப்பதில் இலங்கை மத்திய வங்கியுடனான கலந்துரையாடலின் போது, நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை உள்ளடக்கும் பரப்பு கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே செல்லப்படவேண்டும் என்பதுடன் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் சுட்டெண்கள் வெளியிடப்படுவதன் முக்கியத்துவமும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் தரவுப் பாவணையாளர்களுக்கு 9 மாகாணத்துக்கும் வெவ்வேறான சுட்டெண்ணைப் பயன்படுத்தக் கூடியதாயிருத்தல் மிகவும் பயனுடையதாகும்.

இப்புதிய சுட்டெண்ணைக் கணிப்பதற்கான அறிவைப்பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியம் அனுசரணை வழங்குவதுடன் அதற்கேற்ப இப்பிரிவு அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சி காலத்துக்குக் காலம் வழங்கப்பட்டது. அத்துடன் அந்நிதியத்தின் ஆலோசகர் ஒருவர் இடைக்கிடை இலங்கைக்கு வந்து உரிய வளர்ச்சி படிமுறை பற்றி ஆய்வு செய்து சென்றார். அதன்பிரகாரம் 2013 இலிருந்து இதுவரை இரு தடவைகள் இவ் ஆலோசகர் இலங்கைக்கு வந்து வழங்கிய ஆலோசனையின் படி 2009/10 வருடத்திலும் 2012/13 வருடத்திலும் மேற்கொள்ளப்பட்ட குடித்தன வருமான,செலவின அளவீடுகளிலிருந்து பெற்ற தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் நகர, கிராம குடித்தன நுகர்வுகள் சகலவற்றையும் உள்ளடக்கியவாறு சுட்டெண்ணைத் தயாரிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இலங்கைக்கான புதிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், 9 மாகாணங்களுக்கான நிறைப்படுத்தல்களைக் கொண்டுள்ளதுடன் இது கூடிய விரைவில் வெளியிடப்படவுள்ளது.

### 2.2.9. உள்ளூராட்சி புள்ளிவிபரங்கள்

திணைக்களத்தினூடாக ஒவ்வொரு வருடமும் உள்ளூராட்சி புள்ளிவிபரம் தயாரிக்கப்படுகிறது. இதன்பொருட்டு சகல மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளை உள்ளடக்கி உள்ளூராட்சி நிறுவனங்களின் வருமான,செலவினத் தரவுகள் மற்றும் அதனூடாக வழங்கப்படும் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் அடங்கலாக பொதுத் தகவல்கள் என்பன சேகரிக்கப்படுகின்றன. இந்த சகல தகவல்களும் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவினூடாக உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பிடலுக்காக திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவுக்கு வழங்கப்படுவதுடன் வருடாந்தம் வெளியிடப்படும் அதேவேளை புள்ளிவிபரத்தொகுப்பு, புள்ளிவிபரக் கைநூல் போன்றவற்றிலும் இத்தகவல்கள் உள்ளடக்கப்படும்.

2013 இற்குரிய உள்ளூராட்சிப் புள்ளிவிபரங்கள், 2014 இல் வெளியிடப்பட்ட புள்ளிவிபரத் தொகுப்பு, புள்ளிவிபரக் கையடக்கநூல் என்பவற்றில் உள்ளடக்கப்பட்டதுடன் 2014 இற்குரிய உள்ளூராட்சிப் புள்ளிவிபரங்கள் 2015 இல் வெளியிடப்படும் மேற்படி வெளியீடுகளில் உள்ளடக்கப்படும்.

### 2.2.10 ஆராய்ச்சியும் விசேட கற்கைகளும்

இலங்கையின் அபிவிருத்தி பொருட்டான திட்டமிடலுக்குத் தேவையான மில்லேனியம் அபிவிருத்தி இலக்குத் தரவு சேகரித்தல், திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் தொகைமதிப்புகள், அளவீடுகள் என்பவற்றினூடாகப் பெறப்பட்டு தற்போது இற்றைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தேசிய தரவு ஆணைக்குழு (NDC)

இவ்வாணைக்குழுவுக்குரிய 22வது உப இணைப்பு நடவடிக்கைகள், ஆராய்ச்சி மற்றும் விசேட கற்கைகள் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. தற்பொது இரு உப குழுக்களின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய உப குழுக்களினூடாக உரிய புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### ஆண்/பெண் பிரிவு சம்பந்தமான புள்ளிவிபரங்கள் (Gender Statistics)

திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்படும் தொகைமதிப்புகள் மற்றும் அளவீட்டுத் தகவல்களைப் பயன்படுத்தி சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சுக்குத் தேவையான வெளியீடான **Gender Statistics** வெளியிடல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் தற்பொது அவ்வெளியீட்டின் வரைவு தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 2.2.11 பயிற்சி நடவடிக்கைகள்

புள்ளிவிபரப் பயிற்சிப் பிரிவினூடாக 2014 இற்கான 16 பயிற்சி நெறிகள் மேற்கொள்ளப்பட்டன.

I. தமிழ் மொழிப் பயிற்சி ( III ம் மட்டத்திலிருந்து I ம் மட்டம் வரை )
II. தமிழ் மொழிப் பயிற்சி (மட்டம் III )
III. தமிழ் மொழிப் பயிற்சி (மட்டம் II )
IV. அபிவிருத்தி உத்தயோகத்தருக்கான அலுவலகமுறை சம்பந்தமான பயிற்சிநெறி
V. மாதிரியிடல் முறை பயிற்சிநெறி
VI. தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் என்பவற்றைப் பயன்படுத்தி அளவீட்டுத் தரவை ஆய்வு செய்தல்
VII. இன்வென்றிப் பொருட் கணக்கெடுப்பு சம்பந்தமான பயிற்சி
VIII. வெளிநாட்டுப் பயிற்சி நெறியில் பங்குபற்றிய பின்னர் திணைக்கள அலுவலர்களுக்குத் தெளிவூட்டும் பயிற்சி அமர்வு
IX. அடிப்படை புள்ளிவிபரம் மற்றும் SPSS பாவணை சம்பந்தமான பயிற்சி
X. **"In Design"** கற்கைநெறி
XI. **"Project Management"** பயிற்சிநெறி
XII. **"Arc GIS"** பயிற்சிநெறி
XIII. **"In Design"** பயிற்சிநெறி
XIV. புள்ளிவிபரப் பயிற்சிப்பட்டறை
XV. **"Dev Info"** பயிற்சிநெறி
XVI. திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் தொகைமதிப்புகள், அளவீடுகள் சம்பந்தமாக யாழ் பழ்கலைக்கழக மாணவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

அத்துடன் புள்ளிவிபர உதவியாளர்கள், தரவுப்பதிவு இயக்குனர்கள் மற்றும் குறியீட்டு எழுதுனர்க்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளும் நடத்தப்பட்டன.

### 2.2.12 தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப நடவடிக்கைகள்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தொகைமதிப்புகள், அளவீடுகளின் தரவு வகைப்படுத்தல் நடவடிக்கைகளும் சில குறித்த அமைச்சுகள், திணைக்களங்களில் அமைந்துள்ள புள்ளிவிபரப் பிரிவுகளுக்குரிய தரவு வகைப்படுத்தல் நடவடிக்கைகளும் தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.

**I. குடிசன வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2012 (5% மாதிரி)**

வீட்டுவசதிகள், வேலைவாய்ப்பு, கைத்தொழில் போன்றன சம்பந்தமாக சகல மாவட்டங்களுக்கும் உரிய அட்டவணைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் குறியீடிடல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

**II. குடிசன வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2012 (100%)**

சகல மாவட்டங்கள் மற்றும் இலங்கைக்கான Excel மாதிரிப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட சகல அட்டவணைகளும் பெறப்பட்டு உரிய பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**III. தொழிற்பல அளவீடு - 2013**

மேற்படி அளவீட்டின் மொனராகலை, நுவரெலியா மாவட்டங்களுக்குரிய தரவுகள் பதிதல், தரவுகள் ஒப்புநோக்கல் என்பன பூர்த்தி செய்யப்பட்டு தரவுக்கொப்பு உரிய பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**IV. பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14**

20 மாவட்டங்களுக்கான F1 படிவங்களின் பொருட்டு தரவு பதிதல், ஒப்பு நோக்கல் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**V. மோதல் காரணமாக இறந்தோர்/ காயமடைந்மேதர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் சம்பந்தமான தொகைமதிப்பு - 2013 (LLRC)**

6 மாவட்டங்களின் பொருட்டு கி.உ.பிரிவு ரீதியாக L2 படிவத்தில் குறிப்பிட்ட தரவு பதிதல், ஒப்பு நோக்கல் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**VI. இலங்கை சுங்கத் தரவுகள் - 2014**

2014 ஜனவரியிலிருந்து செம்ரெம்பர் வரையான மாதங்களுக்கு தரவுக் கோப்பு தயாரிக்கப்பட்டு முடிவுற்றதுடன் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது காலாண்டுக்கான சகல அட்டவணைகளும் தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளது.

**VII. வைத்தியப் புள்ளிவிபரங்கள் - 2014**

**வைத்திய சலைகளில் உள்ளக நோய்கள், இறப்புக்கள் சம்பந்தமான அறிக்கை - (IMMR)**

8 மாவட்டங்களுக்கான தரவு பதிதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**VIII. துரிதப்படுத்தப்பட்ட தரவு நிகழ்ச்சித்திட்டம் (ADP)**

இந்நிகழ்ச்சித்திட்டத்துக்குரிய இற்றைப்படுத்தல்கள் மற்றும் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**IX. Lanka SIS**

தரவு முறைமை ஸ்தாபித்தல் மற்றும் அதனூடாக புள்ளிவிபரத் தரவுப் பாவணையாளர்களுக்கு வழங்குதல் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### 2.2.13 வெளியீட்டு நடவடிக்கைகள்

புள்ளிவிபரத் தொகுப்பு, புள்விபரக் கையடக்க நூல், புள்ளிவிபரத் தரவுத்தாள், புள்ளிவிபர செய்தி வெளியீடு, வருடாந்த செயற்திட்டம், திணைக்கள வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கை மற்றும் திணைக்கள நாட்குறிப்பு என்பவற்றை அச்சிட்டு விநியோகித்தல் வெளியீட்டுப் பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

களங்களின் எண்ணிக்கை சம்பந்தமாக புள்ளிவிபரத் தகவல்களை வழங்கும் நோக்கில் புள்ளிவிபரத் தொகுப்பு, புள்ளிவிபரக் கையடக்க நூல், புள்ளிவிபர தரவுத்தாள் என்பவற்றை வருடாந்தம் அச்சிட்டு இணையத்திலும் இப்பிரிவால் பிரசுரிக்கப்பட்டது.

2013 இற்கான தரவுகளை உள்ளடக்கிய சகல வெளியீடுகளும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. திணைக்களம் சம்பந்தமான முக்கிய செய்திகள் அடங்கலான அறிக்கைகள் மற்றும் கடிதங்களை ஒன்று சேர்த்து புள்ளிவிபர செய்தி வெளியீடு பிரசுரிக்கப்பட்டதுடன் கடந்த வருடத்தில் இருமுறை இப்பதிப்பு பிரசுரிக்கப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் நிறைவேற்றுகையை ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ள எதிர்பார்க்கும் வேலைத்திட்டத்தை உள்ளடக்கி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் கீழ் குறித்த நிதியாண்டுக்குரிய செயற்திட்டத்தைத் தயாரித்தல் வெளியீட்டுப் பிரிவின் பொறுப்பாகும். 2015க்கான திணைக்கள செயற்திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் சகல பிரிவுகள், திணைக்களத்துக்கு வெளியில் அமைச்சுகள், திணைக்களங்களில் அமைந்துள்ள புள்ளிவிபரப் பிரிவுகள் மேற்கொள்ளும் வேலைகள் மற்றும் உரிய வருடத்தின் ஆரம்ப அறிக்கை சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய திணைக்கள வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கை, வெளியீட்டுப் பிரிவால் தயாரிக்கப்படுகிறது. இதன் பிரதிகளானது தேர்ந்தெடுக்கப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்புவதுடன் 350 இறுவட்டுக்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்படுகிறது.

திணைக்களத்தால் வெளியிடப்படும் சகல வெளியீடுகளுக்குமான ISBN, ISSN இலக்கம் வழங்குதல், அப்பிரசுரங்களுக்கான விலைகளை நிர்ணயித்தல் என்பனவும் இங்கு இடம்பெறுவதுடன் திணைக்களத்தின் நிறைவேற்றுகை தரத்தகவல்களைப் பகிர்ந்தளித்தல் முக்கியமென்பதால் திணைக்களத்தால் அச்சிடப்படும் முக்கிய வெளியீடுகளை உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விநியோகித்தலும் இப்பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய திணைக்களத்தின் வெளிக்கள நாட்குறிப்பேடு, 2015 இன் பொருட்டு தயாரிக்கப்பட்டு விநியொகித்தல் வெளியீட்டுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.

### 2.2.14 அச்சிடல் நடவடிக்கைகள்

புள்ளிவிபரத் தொகுப்பு, புள்விபரக் கையடக்க நூல், புள்ளிவிபரத் தரவுத்தாள், புள்ளிவிபர செய்தி வெளியீடு, வருடாந்த செயற்திட்டம், திணைக்கள வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கை மற்றும் திணைக்கள நாட்குறிப்பு என்பவற்றை அச்சிட்டு விநியோகித்தல் வெளியீட்டுப் பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

பின்வரும் வெளியீடுகள் 2014ம் ஆண்டு அச்சிடப்பட்டன.

I. புள்ளிவிபரத் தொகுப்பு - 2012
II. புள்ளிவிபரத் தொகுப்பு - 2013
III. News Letter - 2014 வெளியீடு I
IV. தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கான சகல அச்சிடல் நடவடிக்கைகள்
V. தொழிற்பல அளவீடுப் படிவம்
VI. பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14 விவசாயப் பிரிவுக்கான படிவங்கள், அறிவுறுத்தற் கைநூல்கள், குறியீட்டுப் பட்டியல் என்பன அச்சிடல்
VII. பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14 கைத்தொழில் பிரிவுக்கான சகல படிவங்கள், அறிவுறுத்தற் கைநூல்கள், குறியீட்டுப் பட்டியல் என்பன அச்சிடல்
VIII. புள்ளிவிபர கையடக்நூல் - 2013 பதிப்பு
IX. வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கை - 2013
X. தேசிய கணக்கு முறைமை
XI. தேசிய கணக்கு வெளியீடு - 2012
XII. கைத்தொழில் அளவீட்டு அறிக்கை - 2012
XIII. தொழிற்பல அளவீடு - 2012, 3வது காலாண்டு அறிக்கை
XIV. தொழிற்பல அளவீடு - 2013, வருடாந்த சுருக்க அறிக்கை
XV. வெளிக்கள நாட்குறிப்பேடு - 2015
XVI. புள்ளிவிபரக் கையடக்கநூல் - 2014 பதிப்பு
XVII. புள்ளிவிபரக் கையடக்கநூல் - 2014 ஆங்கிலம்
XVIII. குடித்தன வருமான, செலவின அளவீடு - 2012/13 (ஆரம்ப அறிக்கை)

அச்சிடும் இயந்திரம் திருத்தவேண்டியிருந்தாலும் வேறு அவசர வேலை இருந்தமையாலும் 2014 இல் அச்சிட வேண்டியிருந்த 2 வெளியீடுகள் 2015 இல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.2.15 வரைபட நடவடிக்கைகள்

குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2012 இற்கான கி.உ.பிரிவு வரைபடங்கள் டிஜிட்டல் படுத்தப்பட்டதுடன் தற்போது காலி, மாத்தறை மாவட்டங்களுக்கான கி.உ.பிரிவு வரைபடங்களில் 80% மானவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அத்துடன் அம்பந்தோட்டை மாவட்ட கி.உ.பிரிவு டிஜிட்டல் படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அவை சம்பந்தமான நிறுவனங்களின் திட்டமிடல் மற்றும் கொள்கை வகுத்தலுக்குத் தேவையான வரைபடம் தயாரித்தல், உரிய நிறுவனங்களால் விடுக்கப்படும் வேண்டுகோளுக்கிணங்க நிறைவேற்றப்பட்டது. MRCB தரவு முறைமையின் இற்றைப்படுத்தல்கள் மாற்றங்களுக்கேற்ப தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

## 2.2.16 தரவுப் பரம்பல் நடவடிக்கைகள்

### I. நுண் தரவுகளை வெளியிடுதல்

திணைக்களத்தின் நுண் தரவுகளை வெளியிடும் கொள்கைக்கிணங்க (Micro Data Dissemination Policy) இப்பிரிவினால் 2014 இல் 25% மான தரவுக்கோப்புகள் 24 வெளியிடப்பட்டதுடன் 100% மான தரவுக்கோப்புகள் 30ம் வெளியிடப்பட்டது. தரவுப் பாவணையாளர்களுக்கு மிகவும் வினைத்திறனான முறையில் தரவுகளை வெளியிடும் பொருட்டு 2014 இன் தரவுகளை வெளியிடும் கொள்கை இருமுறை இற்றைப்படுத்தப்பட்டது. ; Version 1.0 - 2014.09.10, Version 1.1 - 2014.10.16. தரவுக்கோப்பின் கொள்ளளவு அடிப்டையில் பணம் அறவிடும் முறயைத் திர்மானிப்பதால் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்வோருக்கு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் நுண் தரவுகளை பயன்படுத்துவதற்கான விசாலமான சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. 2014 இனுள் கட்டணம் செலுத்தும் அடிப்படையில் 2 தரவுக்கோப்புகள் வெளியிடப்பட்டது.

### II. பாராளுமன்ற வினாக்களுக்கு விடையளித்தல்

பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படும் இலங்கை பாராளுமன்ற அமைச்சர்களின் வாய்மூல வினாக்களுக்கு விடையளிக்கத் தேவையான தரவுகள், தகவல்களை வழங்குதல் தரவுப் பரம்பற் பிரிவின் பொறுப்பாகும். உரிய பாராளுமன்ற வினாவுக்கு, திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு உரிய பதில்களைத் தயாரித்து பணிப்பாளர் நாயகத்தினூடாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கோ நிதி அமைச்சின் பாராளுமன்ற அலுவல்கள் திணைக்களத்திற்கோ விரைவில் அனுப்பி வைக்கப்படும். இத்தகைய வேண்டுகோள் 2014 இல் 7 கிடைக்கப்பெற்றதுடன் அவை யாவற்றுக்கும் பதில் அளிக்கப்பட்டது.

### III. ஏனைய நிறுவனங்களின் தரவு விண்ணப்பத்திற்கு தகவல் வழங்குதல்

பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள்/ ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் விண்ணபத்திற்கு ஏற்ப தகவல்களை வழங்குதலும் இப்பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது. கடந்த வருடத்தில் சாதாரண தபாலில் வழங்கப்பட்ட 34 விண்ணப்பங்களுக்கு மேலதிகமாக மின்சனஞ்சல் மூலமாக, 120 விண்ணப்பங்களுக்குப் பதில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தரவுப் பாவணையாளர்களுக்கு தொலைபேசி மூலமான விசாரணைகளுக்கும் தரவுப்பரம்பற் பிரிவினால் வேண்டிய தகவல்களும் இணைப்பும் தரவுப் பரம்பற் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.

### IV. திணைக்களப் பணியாளர்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நாடளாவிய ரீதியிலுள்ள தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் அலுவலர் குழாமின் தரவுத் தளத்தைப் பேணுவதன், ஊடாக உயர் முகாமைத்துவத் தேவைக்கான தகவல் வழங்குதலும்

இப்பிரிவால் செய்யப்படுகிறது. இத்தரவுத்தளம் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவால் வழங்கப்படும் தகவல்களின் படி இற்றைப்படுத்தப்படுகிறது.

**V. திணைக்கள வெளியீட்டு விற்பனைக் கருமபீடம் ஒன்றைப் பேணுதல்**

திணைக்கள வெளியீடுகள் சகலவற்றினதும் விற்பனைக்காக விற்பனைக் கருமபீடம் ஒன்றும் இப்பிரிவால் பேணப்பட்டு வருகிறது. திணைக்களத்தின் வெளியீட்டுப் பிரிவால் வழங்கப்படும் வெளியீடுகள் இங்கு விற்பனை செய்யப்படுகிறது. 2014 இல் திணைக்கள வெளியீடுகளின் 488 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 2.2.17 நூலக சேவை

திணைக்கள நூலகம், கிரகித்தற் பகுதி, இரவல் வழங்கற் பகுதி ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

திணைக்கள அலுவலர்களுக்கும் வெளியாட்களுக்கும் கிரகித்தற் பிரிவு திறக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் பழைய, புதிய வெளியீடுகளும் இலங்கையின் நூல்களும் இதற்குரியதாகும். இப்பிரசுரங்கள் வாசித்தலுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்து.அத்துடன் திணைக்கள நூல்கள் இல்லாத பிரசுரங்களை வேறு நூலகத்திலிருந்து இடை நூலகச் சேவையின் கீழ் பெற்றும்கொள்ளும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இரவல் வழங்கற் பிரிவில் திணைக்கள வெளியீடுகளும் புள்ளிவிபரவியல், வரைபடவியல், மக்களியல், கணனியியல், பொருளியல், சமூகவியல், முகாமைத்துவம், கணிதம், நாலகவியல் போன்ற பாட நூல்களும் சாதாரண வாசிப்புக்குகந்த சமய, சாகித்திய நூல்களும் (சிறு கதை, மொழிபெயர்ப்பு, கவிதை) உள்ளதுடன் திணைக்கள அலுவலர்களுக்கு மாத்திரம் வெளியில் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும்.

**நூலக நூல்களை டிஜிட்டல்படுத்தல்**

இணைய அடிப்படையான தன்னியங்கு நூலக நூல்விபரத் தொகுப்பு முறையின் கீழ் நூலக நூல்களின் விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்காக திறந்த மென்பொருளான KOHA பயன்படுத்தப்படுகிறது. தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடத்தப்படும் “ தேசிய தன்னியங்கு வேலைத்திட்டம் “ இன் கீழ் திணைக்கள நூலகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனூடாக திணைக்களத்தின் பழைய மற்றும் நலிவுற்ற நூல்களை (Blue Books) டிஜிட்டல்படுத்திய தரவு அடிப்படையில் உள்ளடக்கப்படுகிறது.

**செய்தித்தாள்ப் பிரிவு**

நூலகத்தில் சிங்கள,தமிழ்,ஆங்கில செய்திதாள்கள் நாளாந்தமும் திணைக்கள வெளியீடுகள் மற்றும் திணைக்களத்துக்குரிய செய்திகள் பிரித்தெடுக்கப்பட்டு பணிப்பாளர் நாயகம், மேலதிகப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் - பிரிவு 02, பணிப்பாளர் - பிரிவு 04 ஆகியோருக்கு பிரதிகள் அனுப்புதலும் மேற்கொள்ளப்படுகிறது.

**நீடிக்கப்பட்ட சேவை**

2014 இல் குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் திணைக்கள வெளியீடுகளின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது.

### 2.2.18 வெளிக்கள முகாமை நடவடிக்கைகள்

மாவட்டபுள்ளிவிபரப் பிரிவுகள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கிடையில் இணைப்பை ஏற்படுத்தி மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுகளுக்குத் தேவையான நிதியங்கள், பௌதீக வசதிகள், பல்வேறு படிவங்களை வழங்குதல், வெளிக்கள முகாமைப் பிரிவின் பொறுப்பாகும். இதன் பொருட்டு 6 மாதங்களுக்கொருமுறை எரிபொருள், சாரதிகளின் பட்டா, மேலதிக நேரக் கொடுப்பனவு என்பன வழங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் மாவட்டத் தலைவர்கள், கள உத்தியோகத்தர்களின் மாதாந்த பயணச் செலவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டன.

மாவட்டப் புள்ளிவிபரக் கையடக்கநூல் தயாரிப்பதற்காக மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுகளுக்கு எழுத்துமூல அறிவுறுத்தல்களும் பயிற்சிப் பட்டறைகளும் நடாத்தப்பட்டன.

வருடாந்தம் மக்களியல், விவசாயற், கைத்தொழிற் குழுக் கூட்டங்களின் இணைப்பு நடவடிக்கைகள் வெளிக்கள முகாமைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் மக்களியல் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் 2014 இன் முன் ஆறு மாதங்களினுள் நடத்தப்பட்டன. ஏனைய திணைக்களங்கள், பிரிவுகளுடன் தலைமை அலுவலகப் பிரிவுகள் பணித்தொடர்பு மேற்கொள்கையில் வெளிக்கள முகாமைப் பிரிவு அதற்கு இணைப்பாக இருந்து உதவியது,

2014 இல் பொருளாதாரத் தொகைமதிப்புக்குரிய விவசாய, கைத்தொழிற் பிரிவுகளின் தொகைமதிப்பு நடவடிக்கை பொருட்டு சகல அலுவலர்களும் ஈடுபட்டிருந்தமையால் சிறந்த மாவட்டப்புள்ளிவிபர அலுவலகத்தைத் தெரிவு செய்தல், மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுத் தலைவர்களுக்கு வருடாந்தப் பயிற்சிப்பட்டறை நடத்துதல், கள உத்தியோகத்தர்களில் வினைத்திறன், ஆற்றலை மேம்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ள இயலாதிருந்தது.

## 2.3 சில அமைச்சுகள், திணைக்களங்களிலுள்ள திணைக்கள கிளை அலுவலகங்களில் நடாத்தபட்ட தொகைமதிப்புகளும் அளவீடுகளும்

### 2.3.1 வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு

தொழிற் திணைக்களத்திலுள்ள புள்ளிவிபரப் பிரிவினாடாக நாடு முழுவதுமுள்ள அரச சார்பு மற்றும் தனியார் துறைகளிலுள்ள ஊழியர் சேமலாப நிதிக்குப் பங்களிப்பு வழங்கும் வர்த்தக, சேவைகள் நிறுவனங்கள் சம்பந்தமாக வருடத்தின் யூன் மாத வேலைநாட்களின் அடிப்படையில் தகவல்கள் விகிதாசாரமாகத் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளின் படி தபால் மூலமாக வருடாந்தத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. நாட்டின் வேலைவாய்ப்பு, கைத்தொழில் மற்றும் தொழில் வகுப்பாக்கத் தகவல்கல்கள் அடங்கலாக தொழிலாளர் களத்துக்குரிய தகவல்களுடன் வருடாந்தம் “வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு “ வெளியிடப்படும். மேற்படி அளவீட்டின் 2013 க்குரிய அறிக்கை அச்சிடப்பட்டுள்ளதுடன் 2014 க்குரிய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 2.3.2 சராசரி உழைப்புகள், வேலை மணித்தியாலங்கள் சம்பந்தமான அளவீடு

இவ்வளவீட்டினூடாக கூலி சபைகள் கட்டளைச் சட்டத்தின் கிழ் சம்பளம் பெறும் நிறுவனங்களின் சேவை நிலைக்கேற்ப பணியாளர்களின் உழைப்புகளின் வேறுபாடுகள் ஆராயப்படுகிறது. இங்கு கூலிகள் சபையின் படி தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் இருந்து ஒவ்வொரு வருடமும் மார்ச், செம்டெம்பர் மாதங்களில் வருடத்துக்கு இருமுறை தபால் மூலம் தகவல் சேகரிக்கப்படுவதுடன் அதன் மூலம் ஒவ்வொரு சேவை நிலைக்கேற்ப உழைப்பு சம்பந்தமான தகவல் சேகரிக்கப்படுகிறது. இத்தகவல்கள் “சராசரி உழைப்புகள், வேலை மணித்தியாலங்கள் சம்பந்தமான அளவீடு “ இல் வெளியிடப்படுவதுடன் அதன் மூலம் சேவை நிலைக்கேற்ப உழைப்புகளும் ஆராயப்படுகிறது.

### 2.3.3 ஆகக் குறைந்த கூலி வீத சுட்டெண் கணித்தல்

கூலி சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் திணைக்களத்தினூடாக கூலிகள் சபையால் நிர்ணயிக்கப்பட்ட ஆக்க் குறைந்த கூலி அடிப்படையில் மாதாந்தம் ஆக்க் குறைந்த கூலி வீதச் சுட்டெண் கணிக்கப்படுகிறது. இச்சுட்டெண் விவசாய (பெருந்தோட்டக்) கைத்தொழில், வாணிபம், சேவைகள் போன்ற பிரதான துறைகளுக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் கணிக்கப்படுகிறது. அத்துடன் இச்சுட்டெண்களின் மூலம் பிரதான துறைகளிலுள்ள ஆகக் குறைந்த கூலி மட்ட மாற்றங்கள் அளவிடப்படுகின்றன. இச்சுட்டெண் இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், சர்வதேச தொழில் ஸ்தாபனம் அடங்கலாக பல்வேறு நிறுவனங்களுக்கு மாதாந்த ரீதியிலும் காலாண்டு ரீதியிலும் வருடாந்தமும் வழங்கப்படுகிறது. 2014 இன் ஒவ்வொரு மாதத்துக்குமான சுட்டெண் தயாரிக்கப்பட்டுள்ளது.

தொழிற் புள்ளிவிபரங்கள் - 2013 வருடாந்த வெளியீடு இணையத்தில் பிரசுரிக்கப்பட்டதுடன் அது அச்சிடப்பட்டு வருகிறது. இப்பிரிவின் ஊடாக நாட்டின் நிர்வாகப் பிரிவு எல்லையின் படி தொழில் மாவட்டப் பிரிவுகளின் எல்லைகள் இனங்காணப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கை தொழில்கள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் அது அச்சிடப்பட்டு தொழில் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

### 2.3.4 கல்விப் புள்ளிவிபரங்கள்

கல்வி அமைச்சிலுள்ள புள்ளிவிபரங்களினூடாக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் பாடசாலைத் தொகைமதிப்புடன் தனியார் பாடசாலைகள், பிரிவேனாக்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்பன சம்பந்தமான தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. வருடாந்தம் வெளியிடப்படும் ஆரம்பத் தொகைமதிப்பு அறிக்கை தயாரிக்கப்படுவதுடன் 2015ஆம் வருட முதல் காலாண்டில் இணையத் தளத்தில் வெளியிடத் தேவையான ஆய்வுக் கல்வித் தரவுகள் வழங்க எதிர் பார்க்கப்படுகின்றது.

2014 இல் இலங்கையின் அரச பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாசாகைளின் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களினது கணனி அறிவு சம்பந்தமான அளவிடு நட்த்தப்பட்டதுடன் தற்போது கள நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளது. இவ்வளவீட்டு அறிக்கை 2015 இரண்டாம் காலாண்டினுள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.
அத்துடன் நாடு பூராகவுமுள்ள சகலபாடசாலைகளினதும் பட்டியல் இற்றைப்படுத்தப்படுவதுடன் தேவைக்கேற்ப ஏனைய திணைக்களங்கள், அமைச்சுக்கள், உள்நாட்டு, வெளிநாட்டுத் தரவுப் பாவணையாளர்களிற்கும் இவ்வாய்வுத் தரவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.3.5 வைத்திய புள்ளிவிபரங்கள்

சுகாதார அமைச்சிலுள்ள வைத்தியப் புள்ளிவிபரப் பிரிவினூடாக உள்நோயாளர், வெளிநொயாளர், பல், மகப்பேற்று விடயங்கள், மரணங்கள், வைத்திய ஆளணி, விசேட வைத்தியர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் அதற்குரிய தரவுகள் சம்பந்தமாக மாதிரிப் படிவங்கள் வழங்கப்பட்டு அவற்றை பூரணப்படுத்துவதன் மூலம் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. இப்பணிகள் 1960 களிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதுடன் பிரிவுக்கு தரவுத்தாள் கிடைத்த சதவீதப் பிரச்சனையும் தாமதமாக கிடைக்கும் பிரச்சனையும் இருந்தது அதற்காக பயிற்சிகள் நடத்தப்பட்டு உரிய அலுவலர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளமையால் 2014 இல் தரவுத்தாள கிடைத்த சதவீதம் திருப்திகரமானதாக இருந்தது.

இவ்வருடத்தில் 2011, 2012, 2013 மூன்று வருடங்களுக்கும் தரவுகள் ஆய்வு செய்யவேண்டி இருந்ததுடன் 2012 க்கான தரவு ஆய்வுகள் முடிவடைந்துள்ளது. 2011 க்கான தரவுகள் 50% மானவையும் 2013க்கான தரவுகளில் 75% மானவையும் முடிவடைந்துள்ளன. 2014 ஆரம்பத்தில் 2009 - 2013 வரையான 5 வருடங்களுக்கான வருடாந்த சிகாதார அறிக்கை வேலையை புர்த்தி செய்ய வேண்டி இருந்ததுடன் 2014 இனுள் வருடாந்த சுகாதார அறிக்கை - 2012 ம் வருடாந்த சுகாதார அறிக்கை - 2009/10 ம் வெளியிட வேண்டியிருந்தது. 2011,2013 க்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

2010இல் அறிமுகப்படுத்தப்பட்ட eIMMR வேலைத்திட்டம் 2012 இல் வைத்தியசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2013 இல் 98 வைத்தியசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2014 இல் புதிதாக 75 வைத்தியசாலைகள் உள்ளடக்கப்பட்டு தற்போது இவ்வேலைத்திட்டம் நாடு பூராவுமுள்ள 173 வைத்தியசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்ட நிறைவேற்றுகைக்காக உலக வங்கி அனுசரனை வழங்குவதுடன் வேலைத்திட்ட அபிவிருத்தி பொருட்டு உலக சுகாதார ஸ்தாபனம் இவ்வருடம் நிதியுதவி வழங்கியுள்ளது.

சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலர்களுக்கும் அமைச்சுக்களுக்கும் நிறுவனங்களின் பட்டியல் வழங்கப்பட்டு, 2014 இன் பொருட்டு இப்பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டதுடன் 2014 இற்கான சுகாதார வைத்திய அலுவலக மட்டத் தொகையினரின் மதிப்பீடும் கணிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டது. அத்துடன் 26 சுகாதார சேவைப் பணிப்பாளர்அலுவலகங்களில் eIMMR முறைமையை இனங்காணும் பொருட்டு 2013 இல் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 26 மீளாய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் 2014 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் சுகாதாரத் தரவு சேகரித்தல் மற்றும் அதன் முக்கியத்துவம் சம்பந்தமான அறிவூட்டல் பொருட்டு கருத்தரங்குத் தொடர்கள் பட்டப்பின்படிப்பு நிறுவனங்களிலும் வைத்திய பீடங்களிலும் நடத்தப்பட்டன.

### 2.3.6 வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள்

பதிவாளர் நாயகம், திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவினூடாக இலங்கையில் வருடாந்தம் பதிவு செய்யப்படும் பிறப்பு, விவாகம், மரணப் புள்ளி விபரங்கள் மற்றும் அதற்குரிய மக்களியல் தகவல்கள், மரணத்துக்கான காரணங்கள் போன்ற தரவுகள் செகரிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. தற்50 பொது 2010 இற்கான பிறப்புகள், மரணங்களுக்குமான தரவுகள் கணிக்கப்பட்டு

வெளியிடப்பட்டுள்ளதுடன் 2011 இன் தரவுகள் கணனிப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2012 - 2014 வரையான 3 வருடத் தகவல்கள் உரிய மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டு வருகிறது.

அத்துடன் நட்டாண்டு சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் இப்பிரிவால் மேற்றகொள்ளப்படுவதுடன் 2014 இற்கான வயதுப் பிரிவு மற்றும் மாவட்ட ரீதியான நட்டாண்டு சனத்தொகை என்பன கணிக்கப்பட்டு தரவுப் பாவணையாளர்களுக்கு வழங்கப்பட்டது. 2013 இற்கான வாழ்நிலைப் புள்ளிவிபரச் சுட்டெண் (உதா: செப்பமற்ற பிறப்பு வீதம், செப்பமற்ற இறப்பு வீதம், சனத்தொகை வளர்ச்சி வீதம் போன்றன) தயாரித்தல் முடிவடைந்துள்ளது.

### 2.3.7 கடற்றொழில் புள்ளிவிபரங்கள்

கடற்றொழில், நிரியல் வள அமைச்சின் புள்ளிவிபரப் பிரிவினூடாக கடல் நீர், நன்னீர் மீன் உற்பத்திகள், மீன்களின் மொத்த, சில்லறை விலைகள், மீனின் இறக்குமதி, ஏற்றுமதி என்பன சம்பந்தமான தரவுகள் சேகரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் கடற்றொழில் புள்ளிவிபரங்கள் - 2014 வெளியீடு இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திர ரூனா ஆனைக்குழு (IOTC) இன் உதவியுடன் கடல் நீர் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தியின் கீழ் விரிவான மீன்கள் சம்பந்தமான தரவு சேகரித்தல் முறை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தற்பொது தரவு சேகரித்தல் நடவடிக்கைகள் 50% அளவில் பூர்த்தியடைந்துள்ளது. அத்துடன் 2014 யூன் - டிசம்பர் வரையான ஐஸ் உற்பத்தி சம்பந்தமான மதிப்பீட்டு அறிக்கை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ரின் மீன் சந்தைவாய்ப்பு சம்பந்தமான ஆய்வுக்காக உள்நாட்டு ரின் மீன் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து தகவல் பெற்றுக்கொள்ளல் தற்போது பூர்த்தியடைந்துள்ளது. எதிர்காலத்தில் அது சம்பந்தமான அறிக்கை ஒன்றை வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.3.8 சுங்கப் புள்ளிவிபரங்கள்

இலங்கை சுங்கத்தின் தானியங்கு தரவு வகைபடுத்தற் பிரிவிலிருந்து கணனிப்படுத்தப்பட்ட ஏற்றுமதி/இறக்குமதி சம்பந்தமான தரவுகளை நாளாந்தம் பெற்றுக்கொள்ளல், வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களுக்குரிய தகவல்களை கணித்தல், இறக்குமதி/ஏற்றுமதி , மீள் ஏற்றுமதிக்கான தரவுகளை வேறாகக் கோவைப்படுத்தல், பிழையான தரவுகளை வழுவற்றதாக்கி மாதாந்த வழுவற்ற கணனிப்படுத்தப்பட்ட தரவுக்கோப்பைத் தயாரித்தல், புள்ளிவிபரத் தரவு விற்பனைப் பிரிவின் வினைத்திறனைப் பேணுதல் என்பன இப்பிரிவின் முக்கிய பொறுப்புகளாகும். வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்கள் மாதாந்த தயாரிக்கப்பட்டு அடுத்த மாத்தின் முதல் 10 தினங்களில் இலங்கை மத்தியவங்கி, பொதுத் தினசேரி, பல்வெறு அமைச்சுகள், திணைக்களங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கு விநியோகிக்கப்பட்டது.

தற்போது வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்கள் - 2013 இன் அரையாண்டு அறிக்கை அச்சிடப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்கள் - 2013 வருடாந்த அறிக்கை, வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்கள் - 2014 அரையாண்டு அறிக்கை என்பன கணிப்பிடப்பட்டு வருகிறது.

# 3 நிர்வாகம்

## 3.1 பிரிவுகள், கிளை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்

### 3.1.1 பிரிவுகளும் அலகுகளும்

2014 ஆம் ஆண்டு பின்வரும் 15 தொழில்நுட்ப, சேவைகள் பிரிவுகளுடன் மேலதிக இரண்டு பிரிவுகளும் செயற்பாட்டில் இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவையும் கொண்டிருந்தது.

பிரிவு 1 - குடிசனத் தொகைமதிப்பும் மக்களியலும்
பிரிவு 2 - கைத்தொழில், நிர்மாணம், வர்த்தக, சேவைகள்
பிரிவு 3 - விவசாயமும் சுற்றாடலும்
பிரிவு 4 - தேசிய கணக்குகள்
பிரிவு 5 - வெளியீடுகள்
பிரிவு 6 - நூலக ஆவணமாக்கல்
பிரிவு 7 - தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பவியல்
பிரிவு 8 - நிர்வாகமும் கணக்கியலும்
பிரிவு 9 - மாதிரி அளவீடுகள்
பிரிவு 10 - அச்சிடல்
பிரிவு 11 - வெளிக்கள முகாமைத்துவம்
பிரிவு 12 - புள்ளிவிபரப் பயிற்சி
பிரிவு 15 - ஆராய்ச்சியும் விஷேட கற்கைகளும்
பிரிவு 16 - விலைகளும் கூலிகளும்
பிரிவு 18 - வரைபடங்கள்
LLRC பிரிவு
தரவுப் பரம்பற் பிரிவு
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### 3.1.2 அமைச்சுக்கள், திணைக்களங்களில் உள்ள கிளை அலுவலகங்கள்

இத்திணைக்களம் பல்வேறு முக்கிய அமைச்சுக்கள், திணைக்களங்களில் 41 கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இக்கிளைகள் ஒவ்வொன்றும் பிரதிப் பணிப்பாளர், சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர், புள்ளிவிபரவியலாளர் அல்லது புள்ளிவிபர உத்தியோகத்தர் அல்லது புள்ளிவிபர உதவியாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது.

### 3.1.3 மாவட்ட அலுவலகங்கள்

மாவட்டச் செயலகங்களிலுள்ள *25* மாவட்ட அலுவலகங்களையும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் "எச்" பிரதேசத்தில் தம்புத்தேகவில் ஒரு அலுவலகத்தையும் இத் திணைக்கம் கொண்டுள்ளது. இவைகள் ஒவ்வொன்றும் பிரதிப் பணிப்பாளர், சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர், அல்லது புள்ளிவிபரவியலாளர் பொறுப்பாக உள்ளதுடன் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் மற்றும் புள்ளிவிபர உதவியாளர்கள் அவரின் கீழ் இணைக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் திணைக்களத்தால் நடத்தப்படும் தொகைமதிப்புகள், அளவீடுகளுக்குரிய தரவு சேகரித்தல் இவ்வலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் மாவட்டத்தினுள் புள்ளிவிபர இணைப்பு நடவடிக்கைகளும் இம்மாவட்ட அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

### 3.1.4 மாகாண சபைகளில் உள்ள புள்ளிவிபர ஆளணியினர்

தொழில்சார் புள்ளிவிபர ஆளணியினரை அமர்த்துவதன் மூலம் மாகாண சபைகளிற்கு புள்ளிவிபரச் சேவைகளை மாகாண சபைகளுக்கு வழங்குதல் தொடரப்பட்டது. தற்காலிகமாகப் புள்ளிவிபர ஆளணியினரை மாகாண சபைகளுக்கு இணைப்பதற்கான ஒழுங்குகள் மாகாண சபைகளுடன் செய்யப்பட்டன. இவ்வொழுங்குகள் புள்ளிவிபரக் கூட்டிணைப்பையும் புள்ளிவிபரத் தரத்தை பராமரித்தலையும் ஆளணியினரை பகிர்ந்தளித்தலையும் உறுதி செய்தன.

## 3.2 ஆளணியினர்

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2014 | 2014..12.31 ம் திகதியின் போதுள்ள பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| 2 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (புள்ளிவிபரம) | 3 | 0 | 3 |
| 3 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (தகவல் தொழில்நுட்பம்) | 1 | 0 | 1 |
| 4 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) | 1 | 0 | 1 |
| 5 | பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 11 | 2 | 9 |
| 6 | பணிப்பாளர்(நிர்வாகம்) | 1 | 1 | 0 |
| 7 | பணிப்பாளர் (ICT) | 2 | 1 | 1 |
| 8 | பிரதம கணக்காளர் | 1 | 1 | 0 |
| 9 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| 10 | பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 34 | 9 | 25 |
| 11 | பிரதிப் பணிப்பாளர் (ICT - அதியுயர்) | 4 | 3 | 1 |
| 12 | பிரதிப் பணிப்பாளர் (ICT) | 6 | 0 | 6 |
| 13 | பிரதி/ உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 0 |
| 14 | உதவிப் பணிப்பாளர் (ICT) | 14 | 7 | 7 |
| 15 | கணக்காளர் | 2 | 2 | 0 |
| 16 | உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 0 | 1 |
| 17 | சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் * | 37 | 33 | - |
| 18 | புள்ளிவிபரவியலாளர் | 200 | 101 | 66 |
| 19 | அச்சக முகாமையாளர் | 1 | 0 | 1 |
| 20 | முறைப்பகுப்பாளர்/ நிகழ்ச்சித்திட்டவியலாளர் | 1 | 0 | 1 |
| 21 | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | புள்ளிவிபரப் பட வரைஞர் | 1 | 1 | 0 |
| 23 | நூலகவியலாளர் | 3 | 3 | 0 |
| 24 | மொழிபெயர்ப்பாளர் | 3 | 2 | 1 |
| 25 | தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - SLICTS | 6 | 0 | 6 |
| 26 | புள்ளிவிபர உத்தியோகத்தர் | 494 | 322 | 172 |
| 27 | புள்ளிவிபர உதவியாளர் * | 202 | 195 | - |
| 28 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 40 | 60 | -20 |
| 29 | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 1 | 0 | 1 |
| 30 | வரைபடவியலாளர் | 1 | 1 | 0 |
| 31 | தகவற் தொடர்பாடற் தொழிநுட்ப உதவியாளர் - SLICTS | 147 | 147 | 0 |
| 32 | அச்சிடல் முடிவுத்துனர் | 5 | 0 | 5 |
| 33 | பொறிவலர்(அச்சிடல்) | 2 | 0 | 2 |
| 34 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| 35 | முறைக் கட்டுக்காப்பாளர் | 2 | 2 | 0 |
| 36 | சிரேஸ்ட முறை இயக்குனர் | 4 | 4 | 0 |
| 37 | போர்மன்(அச்சிடல்) | 1 | 0 | 1 |
| 38 | அரச முகாமை உதவியாளர் சேவை | 170 | 121 | 49 |
| 39 | உதவித் தரவு கட்டுப்பாட்டாளர் | 3 | 3 | 0 |
| 40 | தரவுப் பதிவு இயக்குனர் | 27 | 13 | 14 |
| 41 | தரவுப் பதிவு இயக்குனர்/ குறியீட்டு எழுதுனர் | 123 | 123 | 0 |
| 42 | சிங்கள மொழி மூல எழுதுனர் | 10 | 10 | 0 |
| 43 | தமிழ்மொழி மூல எழுதுனர் | 20 | 17 | 3 |
| 44 | வெரிரைப்பர் ஹெட்லைனர் | 1 | 1 | 0 |
| 45 | புகைப்படக்கருவி இயக்குனர் | 1 | 1 | 0 |
| 46 | புத்தகம் கட்டுபவர் (அச்சிடல்) | 1 | 1 | 0 |
| 47 | சிரேஸ்ட முறைப்பதிவேடு காப்பாளர் | 1 | 1 | 0 |
| 48 | கிலட்டின் இயந்திர இயக்குனர் | 1 | 1 | 0 |
| 49 | லிதோ இயந்திர இயக்குனர் | 1 | 1 | 0 |
| 50 | தகடு ஆக்குனர் | 2 | 2 | 0 |
| 51 | பொறி உதவியாளர் | 1 | 1 | 0 |
| 52 | கொம்டோ மீட்டர் இயக்குனர் | 1 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 53 | சாரதிகள் | 55 | 53 | 2 |
| 54 | குளிரூட்டி இயந்திர இயக்குனர் | 1 | 1 | 0 |
| 55 | பொறிப்பிரிவு ஊழியர்கள் | 1 | 0 | 1 |
| 56 | அலுவலக உதவியாளர் சேவை (நிரந்தரம்) | 107 | 90 | 17 |
| 57 | அலுவலக உதவியாளர் சேவை (திணைக்கள) | 10 | 10 | 0 |
| | **மொத்தம்** | **1774** | **1353** | **397** |
| | சாரதி(அமையம்) | 3 | 0 | 3 |
| | **மொத்தம்** | **1777** | **1353** | **400** |

* புதிய நியமனங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படமாட்டாது

### 3.3 மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றியோர் - 2014

| | | |
|---|---|---|
| 1. | திரு. டபி.ரி.பி. வீரசிங்க<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | மொத்த/ உற்பத்தியாளர் விலைச் சுட்டெண், கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்<br>இந்தியா<br>03/02/2014 - 07/02/2014 |
| 2. | திரு.ஈ. எம்.சி. டி சேரம்<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | மொத்த/ உற்பத்தியாளர் விலைச் சுட்டெண், கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்<br>இந்தியா<br>03/02/2014 - 07/02/2014 |
| 3. | திருமதி. ஆர்.எம்.ஐ.ரத்னாயக்க<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | மொத்த/ உற்பத்தியாளர் விலைச் சுட்டெண், கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்<br>இந்தியா<br>03/02/2014 - 07/02/2014 |
| 4. | திரு. எஸ்.ஜெயவிந்தன்<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | மொத்த/ உற்பத்தியாளர் விலைச் சுட்டெண், கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்<br>இந்தியா<br>03/02/2014 - 07/02/2014 |
| 5. | திரு.பி. எச்..ஐ.கே.குணதிலக<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | தொழிற் சந்தைப் புள்ளிவிபரங்கள் சம்பந்தமான பயிற்சி நெறி<br>பாகிஸ்தான்<br>24/02/2014 - 28/02/2014 |
| 6. | திருவதி.சுகந்தினி தேவேந்திரன்<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | தொழிற் சந்தைப் புள்ளிவிபரங்கள் சம்பந்தமான பயிற்சி நெறி<br>பாகிஸ்தான்<br>24/02/2014 - 28/02/2014 |

| | | |
|---|---|---|
| 7. | திருவதி.டபி.ஏ.சி. விஜேபண்டார<br>புள்ளிவிபரவியலாளர் | தேசிய அளவீட்டுத் தரவு அடிப்படையிலான உணவுப் பாதுகாப்பு ஆய்வு, பிராந்தியப் பயிற்சிப்பட்டறை<br>தாய்லாந்து<br>05/02/2014 - 07/02/2014 |
| 8. | திரு.டி.சி.ஏ.குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | ஐ.நா புள்ளிவிபர ஆணைக்குழு, 45வது அமர்வு<br>ஐக்கிய அமெரிக்கா<br>26/02/2014 - 07/03/2014 |
| 9. | திருமதி. சுசந்த ரணதீர<br>பணிப்பாளர் | சார்க் புள்ளிவிபர அமைப்பின் தலைவர்களின் ஆறாவது கூட்டம்<br>நேபாளம்<br>25/03/2014 - 26/03/2014 |
| 10. | திருமதி.கே.எம்.டி.எஸ்.கருணாரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | புத்தாக்க அளவீடு சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறை<br>சீனா<br>19/03/2014 - 21/03/2014 |
| 11. | திருமதி.வை.ஜி.ஆர்.குலதிலக<br>சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | புத்தாக்க அளவீடு சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறை<br>சீனா<br>19/03/2014 - 21/03/2014 |
| 12. | திரு.ஆர்.டி.ஜே.யு.ராஜபக்ஷ<br>சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | தென் கிழக்கு அசியாவுக்கான ஐ.நா. புவியியல் வல்லுனர்களின் 2வது கூட்டம்<br>இந்தோனேஷியா<br>01/04/2014 - 03/04/2014 |
| 13. | திரு.எஸ்.எச்.மன்சூர்<br>பிரதிப் பணிப்பாளர் | சமுகப் பாதுகாப்புச் சுட்டெண்ணை மேம்படுத்தல்<br>பிலிப்பைன்ஸ்<br>03/04/2014 - 04/04/2014 |
| 14. | திருமதி. எம்.டி.டி.தீபவன்ச<br>புள்ளிவிபரவியலாளர் | சமுகப் பாதுகாப்புச் சுட்டெண்ணை மேம்படுத்தல்<br>பிலிப்பைன்ஸ்<br>03/04/2014 - 04/04/2014 |
| 15. | திருமதி.ஏ..என்.ஏக்கனாயக்க<br>புள்ளிவிபர உதவியாளர் | யு.ஐ.எஸ். கலாச்சார வேலைவாய்ப்புக் குழுக் கூட்டம்<br>கனடா<br>14/05/2014 - 16/05/2014 |
| 16 | திரு.டி.எம்.கே.திசானாயக்க<br>சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | விவசாயப் புள்ளிவிபரத்தில் நவீன தகவற் தொழில்நுட்பம் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை<br>சீனா<br>16/04/2014 - 18/04/2014 |
| 17. | திரு.டிசி.ஏ.குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | ஆசிய பசுபிக் தலைவர்களின் மூன்றாவது குழுக் கூட்டம்<br>மலேசியா<br>08/04/2014 - 10/04/2014 |

| | | |
|---|---|---|
| 18. | திருமதி.யுவி.ஜெயக்கொடி<br>பிரதிப் பணிப்பாளர் | சனத்தொகை அபிவிருத்தி ஆணைக்குழுவின் 45வது அமர்வு<br>ஐக்கிய அமெரிக்கா<br>07/04/2014 - 11/04/2014 |
| 19. | திரு.டபி.பி.எஸ்.சிசிலரத்ன<br>புள்ளிவிபரவியலாளர் | புள்ளிவிபரத் தகவல் ஒருங்கிணைப்பு சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறை<br>சீனா<br>09/06/2014 - 12/06/2014 |
| 20. | திரு.டபி.எச்.பி. வீரசிறி<br>பிரதிப் பணிப்பாளர் | (தொகைமதிப்பு, அளவீட்டு செயன்முறை) பயனாளிகளுக்கான பயிற்சிப் பட்டறை<br>ஐக்கிய அமெரிக்கா<br>27/10/2014 - 07/11/2014 |
| 21. | திரு.ஜி.வி.டி.பிரியந்த<br>உதவிப் பணிப்பாளர் | (தொகைமதிப்பு, அளவீட்டு செயன்முறை) பயனாளிகளுக்கான பயிற்சிப் பட்டறை<br>ஐக்கிய அமெரிக்கா<br>27/10/2014 - 07/11/2014 |
| 22. | திருமதி.ஐ.ஏ.எம்.பெர்னாண்டோ<br>பிரதிப் பணிப்பாளர் | (தொகைமதிப்பு, அளவீட்டு செயன்முறை) பயனாளிகளுக்கான பயிற்சிப் பட்டறை<br>ஐக்கிய அமெரிக்கா<br>27/10/2014 - 07/11/2014 |
| 23. | திருமதி.யு.மகேஸ்வரன்<br>பிரதிப் பணிப்பாளர் | கைத்தொழில்மயப்படுத்தலுக்கான நாடுகளில் 20 வருடப் புள்ளிவிபரங்கள்<br>அவுஸ்திரேலியா<br>11/06/2014 - 12/06/2014 |
| 24. | திரு.ஜே.எம்.ஜயந்த<br>புள்ளிவிபரவியலாளர் | செனகல் *MICS* அளவீட்டுப் பயிற்சிப்பட்டறைத் தரவுகள்<br>செனகல்<br>05/06/2014 - 11/06/2014 |
| 25. | திருமதி.டி.டி.ஜி.ஏ.செனவிரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | சிவிலியன்களின் பதிவு, வாழ்நிலைப் புள்ளிவிபரம் சம்பந்தமான கலந்துரையாடல்<br>இந்தியா<br>16/06/2014 - 17/06/2014 |
| 26. | திருமதி.கே.ஏ.சஜீவா கொடிகார<br>பிரதிப் பணிப்பாளர் | புள்ளிவிபர கொள்ளளவை வலுப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம்<br>கொரியா<br>03/11/2014 - 14/11/2014 |
| 27. | திரு.எஸ்.ஏ.எஸ்.பந்துலசேன<br>பணிப்பாளர் | நுண்தரவுப் பாவனை சம்பந்தமான 6வது சர்வதேச பயிற்சிப்பட்டறை<br>ஜப்பான்<br>15/12/2014 - 22/12/2014 |
| 28. | திரு.எச்.டபி.எம். ஜயவீர<br>புள்ளிவிபரவியலாளர் | நுண்தரவுப் பாவனைக்கான 6வது பயிற்சிப் பட்டறை<br>ஜப்பான்<br>15/12/2014 - 22/12/2014 |

| | | |
|---|---|---|
| 29. | திருவதி.ஏ.கே.எம்.கௌசல்யா<br>புள்ளிவிபர உதவியாளர் | புள்ளிவிபர ஒருங்கிணைப்பு சம்பந்தமான சர்வதேச மாநாடு<br>ஐக்கிய அமெரிக்கா<br>04/08/2014 - 05/08/2014 |
| 30. | திரு.டபி.ஏ.பி.வெஹெரகொட<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | *SLAS class 1* அலுவலர்களின் கல்விச் சுற்றுலா<br>மலேசியா<br>19/10/2014 - 31/10/2014 |
| 31. | திரு.ஆர்.ஏ.சி.குணவர்தன<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | ஆசிய, பசுபிக் வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள் சம்பந்தமான அமைச்சு மட்ட மாநாடு<br>தாய்லாந்து<br>28/08/2014 - 29/08/2014 |
| 32. | திருமதி. சாந்தி சமிலபிரேமி<br>புள்ளிவிபர உதவியாளர் | பொதுத் தரவுப்பரம்பல் முறைமையின் கீழான பயிற்சிப் பட்டறை<br>வியட்நாம்<br>27/08/2014 - 28/08/2014 |
| 33. | கலாநிதி.ஏ.ஜே.சத்தரசிங்க<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | புள்ளிவிபரத் தரங்களுக்கான சர்வதேச மதிப்பீடு சம்பந்தமான கருத்தரங்கு<br>மொங்கோலியா<br>01/10/2014 - 02/10/2014 |
| 34. | திரு.எஸ்.தனபாலசிங்கம்<br>சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | விவசாய, கிராமப் புள்ளிவிபரங்களுக்கான ஆசிய, பசுபிக் பிராந்திய ஒருங்கிணைப்பு சம்பந்தமான 6வது புள்ளிவிபரப் பயிற்சிப்பட்டறை<br>ஜப்பான்<br>02/09/2014 - 04/09/2014 |
| 35. | திரு.எஸ்.ஏ.எஸ்.பந்துலசேன<br>பணிப்பாளர் | இலங்கையில் புள்ளிவிபர தரவுத்தள சேவை முறைமை சம்பந்தமான வேலைத்திட்டம்<br>கொரியா<br>15/09/2014 - 19/09/2014 |
| 36. | திரு.பி.எம்.ஆர்.பெர்னாண்டோ<br>பிரதிப் பணிப்பாளர் | இலங்கையில் புள்ளிவிபர தரவுத்தள சேவை முறைமை சம்பந்தமான வேலைத்திட்டம்<br>கொரியா<br>15/09/2014 - 19/09/2014 |
| 37. | திரு.கே.எம்.ஆர். விக்ரமசிங்க<br>உதவிப் பணிப்பாளர் | இலங்கையில் புள்ளிவிபர தரவுத்தள சேவை முறைமை சம்பந்தமான வேலைத்திட்டம்<br>கொரியா<br>15/09/2014 - 19/09/2014 |
| 38. | திரு.கே.எல்.சி.வீரசூரிய<br>உதவிப் பணிப்பாளர் | இலங்கையில் புள்ளிவிபர தரவுத்தள சேவை முறைமை சம்பந்தமான வேலைத்திட்டம்<br>கொரியா<br>15/09/2014 - 19/09/2014 |
| 39. | திருமதி.எம்.எஸ்.எஸ்.சுமணபால<br>உதவிப் பணிப்பாளர் | இலங்கையில் புள்ளிவிபர தரவுத்தள சேவை முறைமை சம்பந்தமான வேலைத்திட்டம்<br>கொரியா<br>15/09/2014 - 19/09/2014 |

| | | |
|---|---|---|
| 40. | திருமதி.சாந்தனி விஜேபண்டார<br>புள்ளிவிபரவியலாளர் | இலங்கையில் புள்ளிவிபர தரவுத்தள சேவை முறைமை சம்பந்தமான வேலைத்திட்டம்<br>கொரியா<br>15/09/2014 - 19/09/2014 |
| 41. | திரு.டபி.பி.எஸ்.சிசலரத்ன<br>புள்ளிவிபரவியலாளர் | ஆசிய, பசுபிக் பிராந்திய புள்ளிவிபரம் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசகர்களின் 1வது கூட்டம்<br>ஜப்பான்<br>27/10/2014 - 29/10/2014 |
| 42. | திருமதி.சி.எஸ்.லியனகே<br>புள்ளிவிபர உதவியாளர் | விவசாய, கிராமியப் புள்ளிவிபரம் சம்பந்தமான மாதிரி முறைமை தொடர்பான பிராந்தியப் பயிற்சி நெறி<br>இந்தோனேசியா<br>29/09/2014 - 10/10/2014 |
| 43. | திருமதி.ஜி.கே.டி.எச்.மெனிக்கே<br>புள்ளிவிபரவியலாளர் | விவசாய, கிராமியப் புள்ளிவிபரம் சம்பந்தமான மாதிரி முறைமை தொடர்பான பிராந்தியப் பயிற்சி நெறி<br>இந்தோனேசியா<br>29/09/2014 - 10/10/2014 |
| 44. | திரு.யு.எம்.எம்.ஐ.பிரேமரத்ன<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | புள்ளிவிபரத் தரவு சம்பந்தமான *OECD* நிபுணர் குழுக்களின் 7வது கூட்டம்<br>கொரியா<br>27/10/2014 - 30/10/2014 |
| 45. | திருமதி.என்.டபி.திஸ்ஸானாயக்க<br>புள்ளிவிபரவியலாளர் | பசுபிக் சுகாதாரத் தரவுகளின் இந்திய நிறுவனம்<br>இந்தியா<br>13/10/2014 - 17/10/2014 |
| 46. | திரு.டபி.சிறிவர்தன<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | பசுபிக் சுகாதாரத் தரவுகளின் இந்திய நிறுவனம்<br>இந்தியா<br>13/10/2014 - 17/10/2014 |
| 47. | திருமதி.ஒ.ஆர்.விஜேகுணசிங்க<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | பசுபிக் சுகாதாரத் தரவுகளின் இந்திய நிறுவனம்<br>இந்தியா<br>13/10/2014 - 17/10/2014 |
| 48. | திரு.யு.எஸ்.வனபுஷ்ப<br>பிரதிப் பணிப்பாளர் | சர்வதேச வர்த்தகப் புள்ளிவிபரம் சம்பந்தமான பிராந்தியக் கருத்தரங்கு<br>இந்தியா<br>03/11/2014 - 06/11/2014 |
| 49. | திரு.கே.ஜி.திலகரத்ன<br>பணிப்பாளர் | புள்ளிவிபரத் தர முகாமைத்துவம், அலுவலகப் புள்ளிவிபரம் சம்பந்தமான 7வது பிராந்தியக் கற்கைநெறி<br>இந்தியா<br>27/11/2014 - 28/11/2014 |
| 50. | திரு.டி.சி.ஏ.குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | ஆசிய, பசுபிக் ஆராய்ச்சி நிகழ்ச்சிநிரல் சம்பந்தமான சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்<br>தாய்லாந்து<br>11/11/2014 - 12/11/2014 |

| | | |
|---|---|---|
| 51. | திரு.கே.ஆர்.எல்.எஸ்.சேனாதீர<br>புள்ளிவிபரவியலாளர் | ஆசிய, பசுபிக் ஆராய்ச்சி நிகழ்ச்சிநிரல் சம்பந்தமான சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்<br>தாய்லாந்து<br>11/11/2014 - 12/11/2014 |
| 52. | திரு.கே.ரி.சுரேஸ்குமார்<br>புள்ளிவிபரவியலாளர் | சார்க் அபிவிருத்தி இலக்கு சம்பந்தமான துரித வளர்ச்சி<br>இந்தியா<br>02/11/2014 - 07/11/2014 |
| 53. | திரு.கே.ஜி.திலகரத்ன<br>பணிப்பாளர் | தேசிய கணக்குகள் சம்பந்தமான ஐரோப்பிய ஒன்றிய இந்தியக் கருத்தரங்கு<br>இந்தியா<br>25/11/2014 - 26/11/2014 |
| 54. | திருமதி.ஜே..பி.எம்.மெனுரி<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | குற்றவியல் புள்ளிவிபரங்கள், அளவீடுகள் சம்பந்தமான பிராந்தியக் கூட்டம்<br>தாய்லாந்து<br>01/12/2014 - 03/12/2014 |
| 55. | திருமதி.டி.டி.ஜி.ஏ.செனவிரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | ஆசிய, பசுபிக் பிராந்திய வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள் அமைச்சு மட்ட மாநாடு<br>தாய்லாந்து<br>24/11/2014 - 28/11/2014 |
| 56. | திரு.எம்.ஜி.பெரேரா<br>புள்ளிவிபரவியலாளர் | தொழிற்பலம் மற்றும் உழைப்புகளின் புள்ளிவிபரம் சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறை<br>சீனா<br>17/11/2014 - 19/11/2014 |
| 57. | கலாநிதி.ஏ.ஜே.சத்தரசிங்க<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | விவசாய, கிராமியப் புள்ளிவிபரங்கள் சம்பந்தமான ஆசிய, பசுபிக் பிராந்திய குழுக் கூட்டத்தின் 3வது கூட்டத்தொடர்<br>தாய்லாந்து<br>13/11/2014 - 14/11/2014 |
| 58. | திரு.ஜயசம்பத் லியனகே<br>சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | விவசாயம், உணவுப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு சம்பந்தமான கூட்டம்<br>இந்தோனேசியா<br>24/11/2014 - 28/11/2014 |
| 59. | திருமதி.எஸ்.ரி.சி..கவேஷிகா<br>புள்ளிவிபரவியலாளர் | புள்ளிவிபரங்களின் தேசிய உபாயம் சம்பந்தமான பிராந்தியப் பயிற்சிநெறி<br>ஜப்பான்<br>09/12/2014 - 12/12/2014 |
| 60. | திரு.டபி.எம்.ஏ.எஸ்.பிரேமகுமார<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | *NPOS* இற்கான உற்பத்தித்திறன் ஆய்வு சம்பந்தமான ஆராய்ச்சி<br>வியட்நாம்<br>16/12/2014 - 18/12/2014 |

| | | |
|---|---|---|
| 61. | திருமதி.யு.எல்.கே.பெரேரா<br>புள்ளிவிபரவியலாளர் | தரவு சேகரித்தல், புள்ளிவிபரம் சம்பந்தமான 10 வது பயிற்சிப்பட்டறை<br>சீசல்ஸ்<br>02/12/2014 - 04/12/2014 |

## 3.4 பதவியுயர்வுகள், புதிய நியமனங்கள், விடுவிப்புகள், பதவி விலகல்கள், பதவி வெறிதாக்கல்கள் மற்றும் இளைப்பாறல்கள்

**பதவியுயர்வுகள்**

| | |
|---|---|
| புள்ளிவிபரவியலாளர் | 41 |

**புதிய நியமனங்கள்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 22 |

**விடுவிப்புகள்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உதவியாளர் | 03 |
| தரவுப் பதிவு இயக்குனர் | 01 |

**பதவி விலகல்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உதவியாளர் | 02 |
| தகவல் தொழில்நுட்ப சேவை உதவியாளர் | 02 |
| தரவுப் பதிவு இயக்குனர் | 01 |

**இளைப்பாறல்கள்**

| | |
|---|---|
| சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | 02 |
| புள்ளிவிபரவியலாளர் | 07 |
| அச்சிடல் முகாமையாளர் | 01 |
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 02 |
| அரச முகாமை உதவியாளர் | 02 |
| தரவுப் பதிவு இயக்குனர் | 01 |
| சாரதிகள் | 01 |
| அலுவலக உதவியாளர் சேவை | 01 |

**இடமாற்றங்கள்**

| | |
|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 |
| அரச முகாமை உதவியாளர் | 28 |

| | |
|---|---|
| தகவல் தொழில்நுட்ப சேவை உதவியாளர் | 08 |
| சாரதிகள் | 05 |
| அலுவலக உதவியாளர் சேவை | 18 |

**சேவையிலிருந்து விலகிச் செல்லல்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உதவியாளர் | 02 |

### 3.5 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

2014 இற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் கணிப்பிடப்பட்டு கணக்காய்வாளர் அதிபதிக்கு ஒரு பிரதியுடன் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டதுடன் 2014 இன் நான்கு காலாண்டுகளுக்கான வளர்ச்சியும் கணக்காய்வு விசாரணை சம்பந்தமாக கணக்காய்வு முகாமைக் கூட்டங்கள் நடத்தி அவ்விடயங்களுக்கான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு உரிய பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பணிப்பாளர் நாயகத்தினால் வாய் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் விடுக்கப்பட்ட ஆலோசனையின் படி திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவின் லீவு சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டதுடன் பணிப்பாளர்களின் சுயவிபரக்கோவை பரிசீலிக்கப்பட்டு சம்பள ஆண்டேற்றக் கட்டளைப் படிவங்கள், நிறைவேற்றுகை அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல், விதவைகள், அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு இலக்கத்தை வழங்குதல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. இரு மாவட்டப் புள்ளிவிபர அலுவலகங்கள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் பொது நிர்வாகம், பணிகள் என்பன சரிபார்க்கப்பட்டு அது சம்பந்தமான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டதுடன் 2014 இன் சில மாதங்களுக்கு வ்வுச்சர்கள், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள் சரிபார்க்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டன.

திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவு வருடத்துக்கு இரு முறை கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றை நிவர்த்திப்பதற்கான அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. திணைக்களத்திடமுள்ள வாடகைக்குப் பெறப்பட்ட பொருட்கள், உபகரணங்களின் வருட இறுதியிலான உண்மை நிலைவரம் பற்றியும் பத்தரமுல்லை களஞ்சியப் பிரிவின் அலுவலர்களின் வருகை இடாப்பு, பொருளாதார தொகைமதிப்பின் மாவட்ட அலுவலகங்களிலிருந்து கொண்டு செல்லப்பட்டதொகைமதிப்பு மற்றும் சாராம்சப் படிவங்கள் பற்றி பரிசோதிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டது.

திணைக்களத்தின் முற்பணம் B கணக்கு, கணக்காய்வு மாதிரிப் பரிசோதனைக்கும் பொதுவைப்புக் கணக்குக் கணக்காய்வுப் பரிசோதனைக்கும் உட்படுமிடத்து அவற்றிலிருந்த வழுக்கள், குறைகள் வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறே கணக்குப் பதிவேடு, மாதிரிப் பரிசோதனைக்கு உட்படித்தப்பட்டதுடன் சம்பள நிர்வாகக் கணக்கு ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

## 4. நிதி அறிக்கை 2014

2014ம் ஆண்டுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம், அதன் ஏற்புடைய வரையறையின் கீழ் ரூபா 1,994,789,000(1,994.78 மில்லியன்) ஆகும். மீண்டுவரும் செலவினம் ரூபா 683,900,000 (683.9 மில்லியன்) ஆகவும் மூலதனச் செலவினம் ரூபா 1,310,889,000(1,310.88 மில்லியன்) ஆகவும் இருந்தது. 'மீண்டுவரும் செலவினம் 2014" அட்டவணையின்படி உண்மையான மீண்டுவரும் செலவினம் ரூபா 673,168,299 (673.16 மில்லியன்) ஆக இருந்தது. "மூலதனச் செலவினம் 2014" இன்படி செலவழிக்கப்பட்ட உண்மையான மூலதனச் செலவினம் ரூபா 1,284,887,463 (1,284.88 மில்லியன்) ஆக இருந்தது.

மதிப்பிடப்பட்ட செலவினத்துக்கும் உண்மையான செலவினத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் பின்வரும் வகையின் கீழ் இனங்காணப்பட்டு அதற்கான காரணங்களும் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

- இவ்வருடத்தில் வவுச்சர் சமர்ப்பிக்கப்படாமை.
- பராமரிப்புச் செலவு குறைவடைந்தமை.
- எரிபொருட் செலவு குறைவடைந்தமை.

மூலதனச் செலவினத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவினத்துக்கும் உண்மைச் செலவினத்துக்கும் இடைப்பட்ட வேறுபாடுகள்

- திருத்தச் செலவு குறைவடைந்தமை
- வவுச்சர் சமர்ப்பித்தலில் ஏற்பட்ட தாமதம்

தலைப்பு 252 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டம் 01 இயக்கச் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

கருத்திட்டம் 01 நிர்வாக, புள்ளிவிபரச் சேவை

### மீண்டுவரும் செலவினம் - 2014

| கருத்திட்டம் | வாக்குப் பணம் | 2014 மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2014 உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 1 தனிநபர் வேதனாதிகள் | 509,100,000 | 508,124,610 |
| | 2 ஏனைய மீண்டுவரும் செலவினம் | 174,800,000 | 165,043,689 |
| | **மொத்தம்** | **683,900,000** | **673,168,299** |

## மூலதனச் செலவினம் - 2014

| கருத்திட்டம் | வாக்குப் பணம் | 2014 மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2014 உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | மூலதனச்செலவினம்<br>1. சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும் | 12,000,000 | 9,128,631 |
| | 2. மூலதனச் சொத்துக்களை உடமையாக்குதல் | 413,960,000 | 413,880,189 |
| | ஏனைய மூலதனச் செலவினம் | 884,929,000 | 861,878,643 |
| | **மொத்தம்** | **1,310,889,000** | **1,284,887,463** |

### அரசாங்க சேவைகளின் முற்பணக் கணக்கு(ஏ. பீ. ஏ. ஜீ. எஸ்.) 25201 - 2014

| | அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா) | உண்மை எல்லை (ரூபா) |
|---|---|---|
| ஆகக் கூடிய வரவு எல்லை | 44,000,000 | 41,916,870.44 |
| ஆகக் குறைந்த பற்று எல்லை | 25,000,000 | 34,988,158.40 |
| ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | 250,000,000 | 138,284,062.70 |